ஈழநாடு
Eelanadu
வார மலர்
Email : eelanaduweekly@gmail.com
மலர் : 07 01.03.2026 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 55 பக்கங்கள் : 16




# இராணுவமயமாக்கல், நில அபகரிப்புகள் வடக்கு - கிழக்கில் நிறுத்தப்படவேண்டும்!

## செம்மணி குறித்து வெளிப்படையான விசாரணை அநுரகுமார அரசிடம் வலியுறுத்துகின்றது நோர்வே



ஒஸ்லோ, மார்ச் 01

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்று வரும் நில அபகரிப்பு, இராணுவமய மாக்கல் மற்றும் சிறுபான்மையினரின் மத உரிமைகள் மீதான கட்டுப்பாடு கள் குறித்து நோர்வே அரசு தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள் ளது. இவ்வாறான செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்றும் அது கோரியுள்ளது.

அத்துடன், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் மற்றும் செம்மணி மனிதப் புதைகுழி உள்ளிட்ட விடயங்களில் வெளிப்படையான விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்றும் நோர்வே வலியுறுத்தியுள்ளது.


நோர்வே பாராளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற விசேட விவாதத்தின்போதே நோர்வே வெளி விவகார அமைச்சர் எஸ்பென் பார்த் ஐடே இதனைத் தெரிவித்தார்.

நோர்வே பாராளுமன்ற உறுப்பினர் கம்ஷாயினி குணரத்னம் எழுப் பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத்

15

# யுத்தம் முடிவடைவது என்பது மோதல்கள் அனைத்தும் தீர்ந்துவிட்டதாக பொருளல்ல!

## இலங்கை நிலைமை குறித்து கம்ஷாயினி குணரத்னம்



ஒஸ்லோ, மார்ச் 01

"2009 ஆம் ஆண்டு இலங்கை யில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது. ஆனால், யுத்தம் முடிவ டைவது என்பது மோதல்கள் அனைத்தும் தீர்ந்துவிட்டதாகப் பொருள் கொள்ளாது" என்று நோர்வே பாராளுமன்ற உறுப்பினர் கம்ஷாயினி குணரத்னம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சமகால நிலைவரம் குறித்து நோர்வே பாராளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற விசேட விவாதத்தின்போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டார்.

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட கம்ஷாயினி குணரத்னம் சமர்ப்பித்த முன்மொழிவுக்கு அமை யவே இந்த விவாதம் நடைபெற்றது.

அங்கு அவர் ஆற்றிய உரையின்

15

# இஸ்ரேல், அமெரிக்கா சேர்ந்து ஈரான் மீது கூட்டுத் தாக்குதல்!



தெஹ்ரான், மார்ச் 01

ஈரான் மீது இஸ் ரேலும், அமெரிக்கா வும் இணைந்து இன்று வான்வழி தாக் குதலை நடத்தியுள் ளன.

ஈரானின் தலை நகர் தெஹ்ரா னில் பல்வேறு

15

# இனப்பிரச்னைக்கு தீர்வை எட்டும்வரை மாகாண சபை முறைமை நீக்கப்படாது!

## ரில்வின் சில்வா திட்டவட்டம்



கொழும்பு, மார்ச் 01

இனப்பிரச்னைக்கு நிலையான தொரு மாற்றுத் தீர்வைக் கண்டு பிடிக்கும் வரை மாகாண சபை முறைமை நீக்கப்படமாட்டாது என மக்கள் விடுதலை முன்னணி யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித் தார்.

15

# கச்சதீவு ஆலய திருவிழாவில் வரலாறு காணாத பக்தர்கள்!

## 13 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்பு



யாழ்ப்பாணம், மார்ச் 01

முதல் முறையாக 13ஆயிரத்து 364 பக்தர்களின் பங்கு பற்றலுடன் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா இடம்பெற்றதாக யாழ்.மாவ ட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

15

"பழசும் வேண்டாம் புதுசும் வேண்டாம்!"

# பயங்கரவாதத் தடை சட்டத்துக்கு எதிராக வடக்கு - கிழக்கில் நேற்று ஆர்ப்பாட்டங்கள்







யாழ்ப்பாணம், மார்ச் 01

"பழசும் வேண்டாம், புதுசும் வேண் டாம்" எனும் முழக்கத்துடன், பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நேற்று மாபெரும் போராட்டங்கள் முன்னெடுக் கப்பட்டன.

"தாயக செயலணி" அமைப்பின் ஏற்பாட் டில் இந்த எழுச்சிப் போராட்டங்கள் நடைபெற்றன.

யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு முன்பாக ஒன்று கூடிய நூற்று க்கணக்கான

15

# தேவையான பெற்றோல் கையிருப்பில்!

## யாழ். அரசாங்க அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 01

யாழ். மாவட்டத்துக்கு தேவையான பெற்றோல் கையிருப்பில் உள்ளதால் மக்கள் பீதியடையத் தேவை யில்லை எனவும், செயற்கைத் தட்டுப்பாட்டை தவிர்க்குமாறும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அறிவித்துள்ளார்.

15

# சிறீலங்கன் விமானசேவை தாமதம்!

கொழும்பு, மார்ச் 01

இஸ்ரேல் மற்றும் ஈரா னுக்கு இடையிலான போர் பதற்றம் காரண மாக மத்திய கிழக்கு நாடுகள் தமது வான்பரப் புகளை மூடியமையினால் பிரித்தானியா, ஐரோப்பா மற்றும்

15

# பயங்கரவாத சட்டத்தை நீக்க கோரி 29,069 கையெழுத்துக்கள் அரசுக்கு!

யாழ்ப்பாணம், மார்ச் 01

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க கோரியும், அரசைப் பாதுகாக்கும் புதிய பயங்கரவாத தடைச் சட்ட முன்மொழிவைக் கைவிடக் கோரியும் அரசை வலியுறுத்தி, வடக்கு-கிழக்கு தமிழ் சிவில் சமூக அமைப்புக்களால் திரட்டப்பட்ட 29,069 கையெழுத்துக்கள் நேற்று பதிவுத் தபாலூடாக அனுப்பி அரசாங்கத்திற்கு வைக்கப்பட்டுள் ளன.

கடந்த 14 ஆம் திகதி தொடக்கம் வடக்கு கிழக்கு முழுவதும் சிவில் சமூக அமைப்புக்களால்

15

# எரிபொருள் விலையில் மாற்றம்

கொழும்பு, மார்ச் 01

நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகை யில் எரி பொருள் விலை களில் திருத்தம் மேற் கொள்ளப்பட்டுள்ள தாக, இலங்கை பெற்றோலிய

15


# யாழில் எரிபொருளுக்கு வரிசை!

யாழ்ப்பாணம், மார்ச் 01

யாழ்ப்பாணத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்று மதியம் முதல் எரிபொரு ளுக்கு நீண்ட வரிசை காணப்பட்டது.

ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்திய

15





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றுலா மேம்பாட்டு திட்டத்துக்கு ரூ. 130 மில்லியன் நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், மார்ச். 01

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ளூர் சுற்றுலா மற்றும் வெளிநாட்டு சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக 130 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொன்மையான இடங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு உள்ளூர் வேலை வாய்ப்பு அதிகரிக்கப்படவுள்ளது. இதனூடாக அந்நியச் செலாவணியையும் ஈட்ட முடியும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஜெ. ரஜீவன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் வடமராட்சி கிழக்கு மணற்காடு கிராமத்துக்கு சென்று அங்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்ட கிறிஸ்தவ தேவாலயம் என்பனவற்றை பார்வையிட்டபின் அங்கு கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளோடு உரையாடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். மணற்காடு ஒல்லாந்தர் கால டச்சு தேவாலயத்துக்கு 4. 2 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்படவுள்ளது. அத்தோடு, மானிப்பாய் பிரதேசத்திலும் பல அழகான இடங்கள் புனரமைக்கப்படவுள்ளன. - என்றார். (எ-08)

## காலாவதியான உணவு பொருட்களை காட்சிப்படுத்திய விற்பனை நிலையம்

### மன்னாரில் களஞ்சிய சாலைக்கு சீல் வைப்பு

மன்னார், மார்ச். 01

மன்னார் பள்ளிமுனை பிரதான வீதியில் அமைந்துள்ள பிரபல வர்த்தக நிலையம் ஒன்றுக்கு எதிராக கிடைக்க பெற்ற பொது மக்களின் முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கையை அடுத்து குறித்த விற்பனை நிலையத்துக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி ரூபன் லெம்பேட் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மேற்கொண்ட ஆய்வு நடவடிக்கையின் போது, குறித்த வர்த்தக நிலையத்துக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த விற்பனை நிலையத்தில் காலாவதியான பொருட்கள் காட்சிப் படுத்தப்பட்டிருந்த தன் அடிப்படையிலும் அழுகிய பழங்கள், மரக்கறிகளை விற்பனைக்காக வைத்திருந்ததன் அடிப்படையிலும், களஞ்சிய சாலை சுகாதாரமான முறையில் பேணப்படாமையின் அடிப்படையிலும் விற்பனை நிலையத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட உணவுப் பொருட்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டு அழிக்கப்படவுள்ளதுடன் விற்பனை நிலையத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு ஏனைய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் வரை களஞ்சிய சாலைக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது. (எ)

### காலாவதியான உணவு பொருட்கள் விற்பனை

## வர்த்தக நிலைய உரிமையாளருக்கு 25 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 01

அச்சுவேலி பகுதியில் காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனைக்காக காட்சிப் படுத்தியிருந்த வர்த்தக நிலைய உரிமையாளருக்கு 25 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.


அச்சுவேலி பகுதியில் உள்ள உணவு கையாளும் நிலையங்களில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்டோர் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின் போது, பல்பொருள் அங்காடி ஒன்றில் காலாவதியான பிஸ்கெற்களை விற்பனைக்காக காட்சிப்படுத்தியிருந்த வர்த்தக நிலைய உரிமையாளருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது வர்த்தக நிலைய உரிமையாளர் தன் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதை அடுத்து, அவரை கடுமையாக எச்சரித்த மன்று 25 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தது.

இதேவேளை, கடந்த வாரமும் அச்சுவேலி பகுதியில் உள்ள உணவு கையாளும் நிலையம் ஒன்றுக்கு ஓர் இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

அச்சுவேலி பகுதிகளில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து உணவு கையாளும் நிலையங்கள், பல்பொருள் அங்காடிகள் என்பனவற்றில் திடீர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (எ-03)

## யாழில் மாற்றுத்திறன் நபர்களுக்கு மாவட்ட மட்ட வழிகாட்டல் கூட்டம்



யாழ்ப்பாணம், மார்ச். 01

மாற்றுத்திறன் நபர்களுக்கான மாவட்ட மட்ட வழிகாட்டல் குழுக் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க. சிவகரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தலைமையுரையாற்றுகையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மாற்று ஆற்றல் உள்ளவர்கள் 10, 395 பேர் காணப்படுவதாக பதிவில் உள்ளது. அவர்களுக்கான தேவைகள் மற்றும் வசதிகளை மேற்கொள்ள வேண்டிய தேவைப்பாடு காணப்படுகிறது. பிரதேச மட்டத்தில் இது தொடர்பில் பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. பிரதேச மட்டத்தில் நடத்தப்படும் வழிகாட்டல் கூட்டங்களில் இனங்காணப்படும் சில பிரச்னைகளுக்கான தீர்வுகளை மாவட்ட மட்டத்தில் துறைசார் அதிகாரிகள் முன்னிலையில் சமர்ப்பித்து அதற்கான தீர்வுகள் வழங்கப்படுவதற்காக இக் கூட்டம் ஒழுங்குபடுத் தப்பட்டுள்ளது. மாற்றுத்திறன் நபர்களுக்கான வாக்குரிமை தொடர்பிலும் விழிப்புணர்வு நடைபெறவுள்ளது. இவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான செயல்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார். மேலும், இது தொடர்பான கொள்கை களை உருவாக்கும் போது அதனை நடைமுறைப்படுத்து வதில் பல சவால்கள் காணப்படுவதாகவும், மாற்று ஆற்றல் உடையவர்களின் உரிமைகளை பாதுகாப்பது அவசியமாககாணப்படுவதாகவும், அதன் வகிபாகம் சரியாக மேற்கொள்ளப்படும் போது அதன் செயல் பாடுகள் சிறப்பாக அமையும் எனவும், உரிமைகளை பாதுகாக்க அனைவரும் முன் நின்று செயல்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். (எ)

## நீதிமன்றங்களை நவீனமயமாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்!

### கிளிநொச்சியில் பிரதம நீதியரசர்

கொழும்பு, மார்ச் 01

நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை நிறைவுறுத்துவதற்கும் நீதிமன்றங்களை நவீனமயப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதம நீதியரசர பிரித்தி பத்மன் சூரசேன தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசர் பிரித்தி பத்மன் சூரசேன, கிளிநொச்சி நீதிமன்ற வளாகத்துக்கு நேற்று முன்தினம் பிற்பகல் விஜயம் செய்திருந்தார். பிரதம நீதியரசரை கிளி நொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா மாவட்ட மற்றும் நீதிவான் நீதிமன்ற நீதி பதிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள், சட்டத்தரணிகள் வரவேற்றனர்.

தொடர்ந்து நீதிமன்றத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கேற்ற பிரதம நீதியரசர், மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், நீதவான் நீதிமன்றம் ஆகியவற்றை பார்வையிட்டு குறைபாடுகளையும் கேட்டறிந்து கொண்டார்.

கலந்துரையாடலில் நீதி மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா, நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா, மாவட்ட நீதிமன்ற நீதிபதி காயத்ரி சைலவன், நீதிமன்ற நீதவான் பொன்னுத்துரை கிருசாந்தன், சிறுவர் நீதிமன்ற நீதிபதி நிறஞ்சினி முரளிதரன் மற்றும் சட்டத்தரணிகள் நீதி மன்ற பதவி நிலை உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ)

## கூரிய ஆயுதத்தால் தாக்கி நபரொருவர் படுகொலை!

கொழும்பு, மார்ச். 01

சாலியபுர - தெப்பங்குளம் பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் படுகொலை செய்யப்பட்டார்.

வீட்டு உரிமையாளருக்கும், வீட்டுக்கு வருகை தந்த நபரொருவருக்கும் இடையில் ஏற்பட்ட தர்க்கம் மோதலாக மாறியதையடுத்து, வீட்டு உரிமையாளர் குறித்த நபரை தாக்கியுள்ளார்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் சாலியபுர பகுதியைச் சேர்ந்த 41 வயது நபர் என அடையாளம் காணப்பட்டார். சம்பவத்துடன் தொடர்புடைய வீட்டு உரிமையாளரை பொலிஸார் கைது செய்தனர். (எ)

## இலங்கை சுற்றுலாத்துறை புதிய வரலாறு படைத்தது

கொழும்பு, மார்ச். 01

2026 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் இலங்கைக்கு 2 இலட்சத்து 53,293 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ள நிலையில், நாட்டின் சுற்றுலாத்துறை வரலாற்றில் பெப்ரவரி மாதத்துக்கான அதிகபட்ச வருகை எண்ணிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று அதிகாரபூர்வ தரவுகள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்னர், 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் 2 இலட்சத்து 40,217 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்ததே சாதனையாக இருந்தது. இதற்கு முன் 2018 ஆம் ஆண்டு பெப்ரவரியில் 2 இலட்சத்து 35,618 பேர் வருகை தந்திருந்தனர்.

இவ்வாண்டு பெப்ரவரி மாதத்தில் பதிவான 2 இலட்சத்து 53,293 சுற்றுலாப்பயணிகளின் வருகைகளால், அந்த அனைத்து முந்தைய சாதனைகளும் முறியடிக்கப்பட்டன.

2026 பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி நிலவரப்படி, இவ்வாண்டில் இதுவரை இலங்கைக்கு வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 5 இலட்சத்து 30 ஆயிரத்தை தாண்டியுள்ளது. இது, நாட்டின் பொருளாதார மீட்சிக்கான முக்கிய அடையாளமாகவும், சுற்றுலாத்துறையின் வலுவான மீளுருவாக்கமாகவும் கருதப்படுகிறது.

சுற்றுலாத்துறை இலங்கையின் வெளிநாட்டு நாணய வருவாய்க்கான முக்கிய ஆதாரங்களில் ஒன்றாகும். தொடர்ச்சியான சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு, ஹோட்டல் துறை, போக்குவரத்து, சிறு மற்றும் நடுத்தர வணிகங்கள், சுற்றுலா தொடர்பான சேவைகளில் நேர்மறை தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

## 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான போதை மாத்திரைகளுடன் மூவர் கைது

கொழும்பு, மார்ச். 01

30 இலட்சம் ரூபாய் பெறுமதியான போதை மாத்திரைகளுடன் தம்பதியினர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர் என்று பாணந்துறை தெற்கு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் பாணந்துறை மற்றும் எகொடஉயன பிரதேசங்களைச் சேர்ந்த 37, 20 மற்றும் 19 வயதுடையவர்கள் என்று பொலிஸார் கூறினர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய, பாணந்துறை உடஹமுல்ல பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது 20, 000 போதை மாத்திரைகளுடன் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட தம்பதியினர் 23, 000 ரூபாய் மாதாந்த வாடகைக்கு வீடொன்றைப் பெற்று, அங்கிருந்து இந்த போதை மாத்திரை வியாபாரத்தை முன்னெடுத்து வந்தமை ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் கூறினர். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு நாம் முழுமையாக எதிரானவர்கள்

## இலங்கை தமிழ் அரசுக்கட்சி

மட்டக்களப்பு, மார்ச். 01

பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு நாங்கள் முழுமையாக எதிரானவர்கள் என்று இலங்கை தமிழ் அரசுக்கட்சி தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கூறுகையில்,

"மக்கள் விடுதலை முன்னணி பயங்கரவாதத் தடைச்சட்டம் வேண்டாம், புதிய சட்டமே வேண்டாம் என்ற நிலைப்பாட்டிலேயே இருந்தார்கள். இன்று ஆட்சிக்கு வந்ததும் அவர்களே இதற்கு ஒரு மாற்றுச் சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதென்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்வதாகச் சொல்லி ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தற்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்வதை விடுத்து பயங்கரவாத தடைச் சட்டத்தையும் விட மோசமான சட்டத்தை பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் என்ற பெயரிலே முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அந்த அடிப்படையிலே இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக கடந்த காலத்திலே நாங்கள் செயல்பட்டு வந்தோம். தொடர்ந்து வந்த அனைத்து அரசாங்களிடமும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வேண்டும். அந்தச் சட்டம் தேவையில்லை என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தொடர்ச்சியாக முன்வைத்து வந்தது.

ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக் காலத்திலும் இதேபோல ஒரு சட்டம் கொண்டு வரப்பட்ட போது நாடு முழுவதும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்யக் கோரியும் புதிய சட்டம் தேவையில்லை என்று கோரியும் கையெழுத்துப் போராட்டங்களை நாங்கள் நடத்தியிருந்தோம்."- என்றார். (எ)

பாதாள உலக கும்பலின் முக்கிய புள்ளி

# கொமாண்டோ சலிந்தவுக்கு மீளவும் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, மார்ச். 01

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த பாதாள உலகக் குழுவின் முக்கிய செயல்பாட்டாளரான 'கொமாண்டோ சலிந்த' என அழைக்கப்படுபவரை எதிர்வரும் மார்ச் மாதம் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

பிரபல பாதாள உலகக் குழுத் தலைவரான 'கணேமுல்ல சஞ்சீவ' கொலைச் சம்பவத்தின் சந்தேகநபராகப் பெயரிடப்பட்டுள்ள கொமாண்டோ சலிந்த, பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கொழும்பு மேலதிக நீதிவான் அசங்க எஸ். போதரகமவின் உத்தியோகபூர்வ அறையில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது, குறித்த கொலைச் சம்பவம் தொடர்பில் இதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளின் முன்னேற்றங்கள் அடங்கிய அறிக்கையொன்றை குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.

சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மற்றும் விடயங்களை ஆராய்ந்த நீதிவான், சந்தேகநபரை மார்ச் மாதம் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கணேமுல்ல சஞ்சீவவின் கொலையுடன் தொடர்புடைய ஏனைய நபர்கள் மற்றும் அதன் பின்னணியில் உள்ள சூத்திரதாரிகள் குறித்து சி.ஐ.டியினர் தொடர்ந்தும் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பொலிஸ் கண்காணிப்பு பிரிவுக்கு நவீன தொழில்நுட்ப கமரா வாகனம்




கொழும்பு, மார்ச். 01

பொலிஸ் மா அதிபரின் எண்ணக்கருவுக்கு அமைவாக, நவீன தொழில்நுட்ப கமரா அமைப்புகளுடன் மேம்படுத்தப்பட்ட 02 வான்களை பொலிஸ் கண்காணிப்பு கமரா பிரிவுக்கு கையளிக்கும் நிகழ்வு, பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தலைமையில் பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்றது.

பொலிஸ் கண்காணிப்பு கமரா பிரிவு 2010. 12.02 ஆம் திகதியன்று நிறுவப்பட்டது டன், அந்தக் காலப்பகுதியில் இதன் கடமைகளுக்காக கமராக்கள் பொருத்தப்பட்ட 02 வான்கள் பயன்படுத்தப்பட்டன.

அந்த வாகனங்களின் செயல்பாடுகளை மிகவும் திறமையாகவும் பயனுள்ளதாகவும் முன்னெடுப்பதற்காக, 'பிரிமா' நிறுவனத்தின் பங்களிப்புடன் ஒரு வான் நவீன தொழில்நுட்ப கமராக்களுடன் மேம்படுத்தப்பட்டு நன்கொடையாக வழங்கப்பட்டது.

இந்த நவீன தொழில்நுட்ப கமரா அமைப்புகளுடன் மேம்படுத்தப்பட்ட இரண்டு வான்களுக்காக சுமார் 97 இலட்சத்து 94, 000 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. (எ)

# கட்டுநாயக்கவில் சிக்கிய பிடியாணை சந்தேகநபர்!

கொழும்பு, மார்ச். 01

துப்பாக்கிச் சூடு நடத்தி மேற்கொள்ளப்பட்ட இரட்டைக் கொலைச் சம்பவத்தின் சந்தேக நபர் ஒருவர் வெளிநாட்டிலிருந்து வருகை தந்தபோது கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் நேற்று முன்தினம் கட்டாரிலிருந்து நாட்டை வந்தடைந்தபோது, குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

2022.03.24 அன்று கடவத்தை பொலிஸ் பிரிவில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மீது ரி- 56 ரக துப்பாக்கியால் சுடப்பட்டு இந்த இரட்டைக் கொலைச் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இந்தக் குற்றச் செயல் தொடர்பில் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்த குறித்த சந்தேகநபர், மஹர நீதிவான் நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்ட அவர், நீதிமன்ற உத்தரவுகளை மீறி வெளிநாடு தப்பிச் சென்றிருந்தார்.

இதன் காரணமாக அவருக்கு எதிராக சர்வதேச சிவப்பு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

கைது செய்யப்பட்டவர் சியம்பலாபே பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடையவராவார்.

கடவத்தை பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# 2026 ஜனவரி மாதத்தில் வாகன இறக்குமதி வீழ்ச்சி

## சுற்றுலா வருமானம் 378 மில்லியன் டொலர்

கொழும்பு, மார்ச். 01

2026 ஜனவரி மாதத்தில் தனிப்பட்ட மற்றும் வர்த்தக வாகனங்கள் உட்பட வாகன இறக்குமதிகள், 2025 டிசெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் குறைந்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கியின் தகவலின் படி, 2025 டிசெம்பரில் 301 மில்லியன் அமெரிக்க டொலர் அளவில் இருந்த வாகன இறக்குமதிகள், 2026 ஜனவரியில் 224 மில்லியன் டொலராக குறைந்துள்ளன. 2026 ஜனவரி மாதத்தில் சுற்றுலாப் பயணிகள் வருகை, கடந்த ஆண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் உயர்வைப் பதிவு செய்தது டன், 2025 ஆம் ஆண்டில் பதிவான மாதாந்திர மட்டத்தையும் மீறியுள்ளது என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதன்படி, 2026 ஜனவரியில் சுற்றுலா வருமானம் 378 மில்லியன் அமெரிக்க டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்களின் பண மாற்றுகள் 2026 ஜனவரியில் 751 மில்லியன் அமெரிக்க டொலர் ஆக பதிவாகியுள்ளது. இது கடந்த ஆண்டின் அதே மாதத்துடன் ஒப்பிடுகையில் 31. 1 சதவீத உயர்வை குறிக்கிறது.

2026 ஜனவரியில் அரசுப் பத்திர சந்தையில் வெளிநாட்டு முதலீடுகள் 17 மில்லியன் அமெரிக்க டொலர் நிகர வரவாக பதிவாகியுள்ளது. (எ)

# பொலிஸார் சுற்றிவளைப்பில் ஒரே நாளில் 621 பேர் கைது!

கொழும்பு, மார்ச். 01

பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 621 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 297 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 207 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 243 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 73 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4,170 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (எ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுரேஷ் சாலே கைது:

# சகல பாதுகாப்பு துறைகளும் வீழ்ச்சியடையும் அபாயம்!

கொழும்பு, மார்ச். 01

சுரேஷ் சாலே தொடர்பில் அரசாங்கம் மிகவும் அவதானமாக செயல்பட வேண்டும். அவரை கைது செய்துள்ளதன் மூலம் பொலிஸ் உள்ளிட்ட பாதுகாப்புத் துறைகள் அனைத்தும் வீழ்ச்சியடையும் அபாயம் உள்ளது என்று முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

“அரச புலனாய்வுத் துறையின் முன்னாள் பிரதானி சுரேஷ் சாலே நேர்மையான- திறமையான ஓர் அதிகாரி. அதனால், அவரை திடீரென கைது செய்து, அவரின் நற்பெயரின் ஊடாக ஒரு சில விடயங்களால் அரசாங்கம் நற்பெயரை அடைந்துகொள்ள முயற்சிப்பதாக இருந்தால், அது மிகவும் அநீதியாகும். ஏனெனில் இதன் மூலம் பொலிஸ், இராணுவ, பாதுகாப்பு அதிகாரிகளின் மன தைரியம் பாரியளவில் வீழ்ச்சியடையும்.

அதனால், சுரேஷ் சாலேயை கைதுசெய்து தப்பித்துக்கொள்ள முடியும் என நினைக்க வேண்டாம். அவரை கைது செய்துள்ளதன் மூலம் பொலிஸ் உள்ளிட்ட பாதுகாப்புத் துறைகள் அனைத்தும் வீழ்ச்சியடையும் அபாயம் உள்ளது.”- என்றார். (எ)

# கோடாவுடன் ஒருவர் கைது

கம்பஹா, மார்ச். 01

கம்பஹா - பமுனுகம, முத்துராஜவெல பகுதியில், சட்டவிரோத மதுபானம் மற்றும் கோடாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் பதிவானது. பமுனுகம பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே, இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, சட்டவிரோத மதுபானம் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன. மேலும், சந்தேகநபரிடமிருந்து, 168 லீற்றர் 750 மில்லிலீற்றர் சட்டவிரோத மதுபானம், 2,835 லீற்றர் கோடா என்பன கைப்பற்றப்பட்டன. (எ)

### ஜிந்துப்பிட்டி துப்பாக்கிச் சூடு:

# கொலையாளிகளுக்கு உதவிய இருவர் கைது

கொழும்பு, மார்ச். 01

ஜிந்துப்பிட்டியில் துப்பாக்கிச்சூடு நடத்தி ஒருவரை கொலை செய்து, மேலும் நால்வருக்கு காயம் ஏற்படுத்திய குற்றச் செயலுக்கு உதவிய இருவர் கைது செய்யப்பட்டனர்.

குறித்த குற்றச் செயலின் பின்னர், துப்பாக்கிச் சூடு நடத்தியவர் துப்பாக்கியுடன் தப்பிச் சென்ற ஓட்டோ சாரதியே ஒரு சந்தேகநபர் என்பதும், சந்தேகநபரான பெண் அவருக்குத் துணையாக இருந்துள்ளார் என்பதும் மேலதிக விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடந்த 14 ஆம் திகதி இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்த நிலையில், கொழும்பு வடக்கு பிரிவு குற்றத் தடுப்பு பணியகத்தின் அதிகாரிகள் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

இதற்கமைய, நேற்று முன்தினம் கடவத்தை - சூரியபாலுவ பகுதியிலும், வெல்லம்பிட்டிய - வெஹெரகொடல்ல பகுதியிலும் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு வடக்கு பிரிவு குற்றத் தடுப்பு பணியகத்தின் அதிகாரிகள் குழுவொன்றினால், 06 கிராம் 540 மில்லிகிராம் ‘ஐஸ்’ போதைப்பொருளுடன் சந்தேகநபரையும், 03 கிராம் 100 மில்லிகிராம் ‘ஐஸ்’ போதைப்பொருளுடன் சந்தேகநபரான பெண்ணையும் கைது செய்து கரையோர பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர்களை நிரந்தர சேவையில் இணைக்க வேண்டும்

### எதிர்க்கட்சி தலைவர் சஜித் வலியுறுத்தல்

கொழும்பு, மார்ச். 01

நிரந்தர சேவையில் இணைத்துக் கொள்ளப்படாத டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர்கள் இன்னும் 298 பேர் காணப்படுகின்றனர். அவர்களையும் நிரந்த சேவையில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர்கள் (கள டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர்) இலவச சுகாதாரத் துறையில் மக்களின் ஆரோக்கியத்தை வலுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்கை ஆற்றி வருகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தியின் வேண்டுகோளின் பேரில் 640 டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர்கள் நிரந்த சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்றும் சஜித் கூறினார்.

டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் தமது பிரச்னைகளை முன்வைப்பதற்காக சஜித் பிரேமதாஸவை கொழும்பில் சந்தித்தனர்.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.(எ)

### ரூ. 50 கோடி பெறுமதியான

# பல போதைப்பொருட்களுடன் பெண் உட்பட நால்வர் கைது!

கொழும்பு, மார்ச். 01

50 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய ஐஸ் மற்றும் ஹெரோயின் உள்ளிட்ட போதைப் பொருட்களுடன் பெண் ஒருவர் உட்பட நான்கு சந்தேகநபர்களை பொலிஸார் நேற்று முன்தினம் மாலை கைது செய்தனர்.

அஹுங்கல்ல மற்றும் அம்பலாங்கொட ஆகிய பகுதிகளில் கைது செய்யப்பட்ட இந்த சந்தேகநபர்களிடம் இருந்து 13 கிலோ கிராம் ஐஸ் போதைப் பொருளும், 14 கிலோ கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டன என்று தென் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கித்சிறி ஜயலத் தெரிவித்தார்.

மேலும், இவர்களிடமிருந்து 9 மில்லி மீற்றர் ரக கைத்துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் 30 தோட்டாக்களும் மீட்கப்பட்டன. (எ)

# 4 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, மார்ச். 01

களுத்துறை, இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் பிற்பகல் 02.00 மணிக்குப் பின்னர் ஒரு சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் பிரதானமாக மழை அற்ற வானிலை நிலவக்கூடும் என்று அந்தத் திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அநுராதபுரம் மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் அதிகாலை வேளையில் சில இடங்களில் பனிமூட்டமான நிலை காணப்படலாம் என்று அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (எ)

# “ஜே.வி.பிக்கு நேரடி தொடர்புள்ளதால் குண்டுவெடிப்பு விசாரணை முடக்கம்”

கொழும்பு, மார்ச். 01

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர்களும் தொடர்பு பட்டுள்ளதால் அரசாங்கம் குண்டுவெடிப்பு தாக்குதல் தொடர்பான விசாரணைகளை கடுகளவேனும் முன்னுக்கு கொண்டுசெல்லும் நடவடிக்கையை மேற்கொள்ளப்போவதில்லை என்று பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார்.

புலனாய்வுத்துறை முன்னாள் பிரதானி சுரேஷ் சாலேவின் கைது தொடர்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

“உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் தொடர்பில் இடம்பெறும் விசாரணைகளை ஒருபோதும் நாங்கள் குழப்பப்போவதில்லை. விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் தயாராக இருக்கிறோம். புலனாய்வுத் துறை முன்னாள் பிரதானி சுரேஷ் சாலே சிறந்த அதிகாரி. விசாரணைக்காகவே அவர் தற்போது கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர் மாத்திரமல்ல யாராக இருந்தாலும் இந்தத் தாக்குதல் தொடர்பில் விசாரணைக்கு அழைத்தால் அதற்கு செல்ல வேண்டும். தகவல்கள் தெரிந்திருந்தால் அதனைத் தெரிவிக்க வேண்டும். எங்களை அழைத்தால் நாங்களும் செல்வோம்.”- என்றார். (எ)

## கால்வாயில் விழுந்து மூதாட்டி உயிரிழப்பு!

மாத்தளை, மார்ச். 01

மாத்தளை - இரத்தோட்டை பகுதியில் பெண் ஒருவர் தனது வீட்டுக்கு அருகிலுள்ள கால்வாயில் விழுந்து உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்த சம்பவம் பதிவானது.

உயிரிழந்தவர் இரத்தோட்டை, கைகாவல பகுதியைச் சேர்ந்த 74 வயது பெண் என அடையாளம் காணப்பட்டார்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## இளைஞன் மர்ம மரணம்

புத்தளம், மார்ச். 01

புத்தளம் - கொட்டுக்கச்சிய பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்தச்சம்பவம் பதிவானது.

காயமடைந்த நபர் ஒருவர் புத்தளம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்று பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

உயிரிழந்தவர் கொட்டுக்கச்சிய பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார்.

இளைஞன் உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
01.03.2026 ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம், மாசி 17

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# பல்துருவ உலகம் என்ற மாயை

கடந்த வருடம் உலகின் பல்வேறு பிராந்தியங்களில் எட்டுப் போர்களை நிறுத்தியதற்காக தனக்கு நோபல் சமாதானப் பரிசு வழங்கப்பட வேண்டும் என்று கேட்ட அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எட்டு மாத காலத்திற்குள் இரண்டாவது தடவையாக இஸ்ரேலுடன் சேர்ந்து மத்திய கிழக்கில் ஈரான் மீது விமானக்குண்டுத் தாக்குதல்களை நடத்தத் தொடக்கியிருக்கிறார்.

இந்த தாக்குதல்களை நடத்துவதற்கான திட்டத்தை அமெரிக்காவும் இஸ்ரேலும் பல மாதங்களாக தீட்டிவந்திருக்கின்றன என்பதை தாக்குதல்களின் இலக்குகளையும் பாணியையும் நோக்கும்போது தெரிகிறது. ஆனால், தாக்குதல்களை தொடங்குவதற்கு தெரிந்தெடுத்த தருணம் பல கேள்விகளை எழுப்புகிறது.

ஈரானின் அணுத்திட்டம் தொடர்பில் வாஷிங்டனுக்கும் தெஹ்ரானுக்கும் இடையில் ஆறாவது சுற்றுப் பேச்சுக்கள் ஆரம்பிக்கபடவிருந்த நிலையில் கடந்த வருடம் ஜூனில் முதலில் இஸ்ரேலும் பிறகு அமெரிக்காவும் ஈரானிய இலக்குகள் மீது குண்டுத் தாக்குதல்களை நடத்தின. இப்போது ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் இரண்டாவது பேச்சுவார்த்தை செயன்முறை முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் முன்னரைப் போன்றே இஸ்ரேலுடன் சேர்ந்து அமெரிக்கா தாக்குதல்களை தொடங்கியிருக்கிறது.

ஈரானின் அணுத்திட்டம் தொடர்பிலான பேச்சுக்களை முன்னெடுப்பதில் டொனால்ட் ட்ரம்புக்கு அக்கறையில்லை என்பது இரண்டாவது தடவையாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஈரானில் ஆட்சி மாற்றத்தை செய்வதே ட்ரம்பின் நோக்கம் என்பது தெளிவாகத் தெரிகிறது.

பதிலடியாக, அரபு நாடுகளில் இருக்கும் அமெரிக்கத் தளங்கள் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தத் தொடக்கியிருக்கிறது. மத்திய கிழக்கு பிராந்தியத்தில் பரந்தளவில் போர் மூளக்கூடிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

இராஜதந்திர முயற்சிகளை முன்னெடுத்துக் கொண்டே அதே வேளை குண்டுத்தாக்குதல்களை இஸ்ரேலுடன் சேர்ந்து நடத்தும் ட்ரம்பை எந்தவொரு சமாதான முயற்சியிலும் இனிமேல் உலகத்தினால் நம்பமுடியாது. அதேவேளை, அமெரிக்காவையோ அல்லது இஸ்ரேலையோ கட்டுப்படுத்தக்கூடிய சக்தி உலகத்தில் எந்த நாட்டிடமே இல்லை என்பதே இன்றைய சர்வதேச யதார்த்தம்.

தாங்கள் விரும்பிய நேரத்தில் நாடுகள் மீது தாக்குதல்களை தொடுக்க ட்ரம்பினாலும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதான்யாகுவினாலும் இயலமாக இருக்கிறது. தாக்குதல்களை தொடுப்பதும் நிறுத்துவதும் அவர்களின் விருப்பப்படியே நடக்கிறது.

இன்றைய உலகம் பல்வேறு பலம்பொருந்திய நாடுகளைக் கொண்டதாக அதாவது பல்துருவமயமானதாக இருக்கிறது என்று நாம் நம்பிக் கொண்டிருக்கிறோம். அதாவது சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு பின்னரான காலப்பகுதியில் தோன்றிய அமெரிக்காவின் தனி ஆதிக்கத்திலான ஒருதுருவமய ஒழுங்கு இனிமேலும் இல்லை என்று ஒரு மாயையில் வாழ்ந்து கொண்டிருந்தோம்.

ஆனால், டொனால்ட் ட்ரம்ப் சர்வதேச சட்டங்களைப் பற்றி தனக்கு கவலையில்லை என்று வெளிப்படையாகவே கூறிக்கொண்டு செய்து வரும் சர்வதேச காடைத்தனம் உலகம் இப்போதும் ஒரு துருவமயம்னதாகவே நடைமுறையில் இருக்கிறது என்பதை நிரூபிக்கிறது.

# குஞ்சுக்கால்வெளி பகுதியில் சட்டவிரோதமாக உப்பளம் அமைக்கும் முயற்சி தடுத்துநிறுத்தம்

முல்லைத்தீவு, மார்ச் 01

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் குஞ்சுக்கால்வெளி பகுதியில் பெரும்பான்மை இனத்தவர்களால் சட்டவிரோதமாக உப்பளம் அமைக்கும் முயற்சி நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட நிலையில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால் தடுத்து நிறுத்தப்பட்டது.

குறித்த பிரச்னை தொடர்பில் கலந்துரையாடுவதற்கு மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில், பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கொக்குத்தொடுவாய்ப் பகுதி தமிழ் மக்கள், சட்டவிரோதமாக உப்பளம் அமைக்க முற்பட்ட பெரும்பான்மையினத்தவர்கள், வனஜீவராசிகள் திணைக்களம் ஆகிய தரப்பினருடன் மாவட்ட செயலகத்தில் நேற்று கலந்துரையாடல் இடம்பெற்றது.

உப்பளம் அமைக்க முயற்சிக்கப்படும் காணிகள் தமிழ் மக்களின் தனியார் காணிகள் எனவும், அந்தக் காணிகள் மீட்கப்பட்டு காணிகளுக்குரிய தமிழ் மக்களிடமே கையளிக்கப்பட வேண்டுமெனவும் பாராளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் கொக்குத்தொடு வாய் கிராம மக்களால் மாவட்ட அரசாங்க அதிபர்அ.உமாமகேஸ்வரனிடம் எழுத்து மூலமான கோரிக்கை முன்வைக்கப்பட் டுள்ளதுடன், காணி ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்நிலையில் எழுத்து மூலக் கோரிக்கை மற்றும் காணி ஆவணங்களின் பிரதியைப் பெற்றுக்கொண்ட அரசாங்க அதிபர் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணும் வரை உப்பளம் அமைக்கும் முயற்சிகளை நிறுத்தி வைக்குமாறு வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தம்மால் கடிதம் அனுப்பப்ப டுமெனவும், இந்தப் பிரச்னை தீர்க்கப்படாமல் அந்தப் பகுதியில் எந்தச் செயற்பாடுகளையும் மேற்கொள்ள அனுமதிக்க வேண்டாமென பொலிஸாருக்கும் கடிதம் அனுப்பப்படுமெனவும் தெரிவித்தார். (அ)

# இலங்கை-இந்திய மீனவர்கள் பிரச்னைக்கு இராஜதந்திர ரீதியில் தீர்வு காண முயற்சி!

மன்னார், மார்ச் 01

இலங்கை-இந்திய மீனவர்களுக்கிடையிலான நீண்டகால பிரச்சினைக்கு இராஜதந்திர ரீதியில் தீர்வு காண ஜனாதிபதி ஆர்வம் காட்டி வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற அபிவிருத்தி குழு கூட்டத்தில் மீனவர்கள் முன்வைத்த கோரிக்கைகளை அடுத்து, மாவட்ட மீனவர்கள் பிரச்னை குறித்து ஆராய நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தலைமையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று முன் தினம் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நிஜாகரன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், இலங்கை கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், காதர் மஸ்தான், எம்.ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது உழவு இயந்திரங்கள் பயன்படுத்தி கரைவலை தொழில் முன்னெடுத்தல், பட்டிவலை மற்றும் சுருக்குவலை தொடர்பான பிரச்னைகளும் ஆராயப்பட்டன.

உழவு இயந்திரங்கள் பயன்படுத்தி கரைவலை தொழில் மேற்கொள்வதற்கு விதிக்கப்பட்ட தற்காலிக தடையால் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக ஜனாதிபதி மட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

மன்னார் கடல் பகுதி ஏனைய இடங்களை விட மாறுபட்டது என்றும், அங்கு கடலடி தாவரங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தொழிலை தொடர அனுமதிக்கவேண்டும் என்று மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர். பட்டிவலை மற்றும் சுருக்குவலை தொடர்பான பிரச்னைகளும் ஆராயப்பட்டன.

நாரா நிறுவனத்தின் மூலம் ஆய்வுகளை மேற்கொண்டு, இரண்டு மாதங்களுக்குள் தகுந்த தீர்வை வழங்குவதாக அதிகாரிகள் உறுதியளித்தனர். (அ)

# வவுனியா விபத்தில் ஒருவர் உயிரிழப்பு!

வவுனியா, மார்ச் 01


வவுனியா மாவட்டம் பூனாவை பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் மாலை குறித்த நபர் பூனாவை பகுதியில் இருந்து மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார்.

இதன்போது கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியின் அருகில் இருந்த தூணுடன் மோதி விபத்திற்குள்ளாகியது.

இந்நிலையில் குறித்த நபர் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் அவர் முன்னரே உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவத்தில் பூனாவை வாரக்வெள பகுதியை சேர்ந்த 30 வயது நபரே உயிரிழந்துள்ளார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் கருவூலத்தின் திறவுகோல்!

ராதாகிருஷ்ணன்

இன்றைய இணையயுகத்தில் எல்லா திசைகளிலிருந்தும் தகவல்கள் பெருக்கெடுத்து வருகின்றன. தகவல் தொழில்நுட்பப் புரட்சியால், தொலைக்காட்சி, ஃபேஸ்புக், வாட்ஸ்-ஆப், இன்ஸ்டாகிராம், எக்ஸ் என பல சமூகவலைதளங்கள் மூலம் உடனுக்குடன் செய்திகள் நம்மை வந்தடைகின்றன. எனினும், மக்களின் மனதோடு நெருக்கமானதாகவும், சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் பன்னெடுங்காலமாக செய்தித்தாள்களும், புத்தகங்களும் விளங்கி வருகின்றன.

மின்னணு ஊடகங்கள் வருவதற்கு முன்பு, அச்சு ஊடகங்கள் மக்களுக்குத் தகவல்களைப் பரப்புவதில் முக்கியப் பங்கு வகித்தன. சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகள், இலக்கியவாதிகள் தன்னார்வலர்கள் ஆகியோருக்கு சிறந்த நண்பராக புத்தகங்கள் உள்ளன.

புத்தக வாசிப்பு என்பது உலக நடப்பை அறியவும், மொழித் திறனை மேம்படுத்தவும், சமூகங்களிடையே நல்லுறவை வளர்க்கவும், மனிதர்களைப் புரிந்து கொள்ள உதவும் ஒரு முக்கியமான கருவியாகவும் விளங்குகிறது. மக்களிடையே அறியாமை இருளை அகற்றி, அவர்களின் சிந்தையில் ஒளியேற்றும் கைவிளக்காகவும், அறிவுக் கருவூலத்தின் திறவுகோலாகவும் புத்தகங்கள் உள்ளன. சாதாரண மக்களுக்கு சமூகத்தை ஒட்டு மொத்தமாக அறிந்து கொள்ளக்கூடிய சக்தியை செய்தித்தாள்கள் அளிக்கின்றன.

“வாளின் முனையைவிட பேனாவின் முனை கூர்மையானது” என்பார்கள். எழுத்தின் தாக்கம் சக்தி வாய்ந்தது, ஆயுதத்தைவிட வலிமையானது. ஒரு கத்தி உடலுக்கு காயத்தை ஏற்படுத்தலாம். ஆனால், ஒரு பேனா, ஒருவரின் மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி, சிந்தனையை வளர்த்து, சமூகத்தில் மாற்றத்தையும் கொண்டு வரும்.

பத்திரிகைகள் ஜனநாயகத்தில் நான்காவது தூணாக விளங்கி வருகின்றன. இது பேச்சு, கருத்துச் சுதந்திரத்துக்கான உரிமையை சட்டத்துக்கு உட்பட்டு பயன்படுத்துகின்றன. ஜனநாயகத்தின் முக்கிய காவலாளியாக பத்திரிகைகள், அச்சு ஊடகங்கள் செயல்படுகின்றன. “அரசமைப்புச் சட்டம் உறுதி அளித்துள்ள



கருத்துச் சுதந்திரம் என்பது, நம் ஜனநாயகத்தின் அழகு” என சென்னை உயர்நீதிமன்றம் அண்மையில் தெரிவித்துள்ளது.

ஜனநாயகத்தின் சரியான செயல்பாட்டிற்கு பத்திரிகை சுதந்திரம் இன்றியமையாதது. எனினும், “பத்திரிகைச் சுதந்திரம் முழுமையான, வரம்பற்றது மற்றும் எல்லா நேரங்களிலும், எல்லாச் சூழ்நிலைகளிலும் கட்டுப்பாடற்றது அல்ல. ஏனெனில், அது ஒழுங்கின்மை, அராஜகத்துக்கு வழிவகுக்கும்” என 1997-ஆம் ஆண்டில் இந்திய உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகைச் சுதந்திரம் பொறுப்புடனும், பொறுப்பு மற்றும் பொது ஒழுங்கு, ஒழுக்கம் போன்றவற்றுக்கான நியாயமான கட்டுப்பாடுகளுடன் இயங்க வேண்டும் என்பதை இந்தத் தீர்ப்பு வலியுறுத்தியுள்ளது. ஜனநாயகத்தின் வளர்ச்சி, பத்திரிகை வளர்ச்சியுடன் மிகவும் பின்னிப் பிணைந்துள்ளதால், நவீன ஜனநாயகத்தின் நிறுவன அங்கமாக மக்களால் பத்திரிகை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

எனினும், அறிவியல் தொழில் நுட்பம் வளர்ந்து விட்ட இந்தக் காலத்தில், அச்சு ஊடகங்களுடனான நமது உறவு சுருங்கி வருகிறது. கடந்த 2024-ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வு, தினசரி மின்னணு ஊடகங்கள் மூலம் திரையைப் பார்க்கும் நேரம் 7.5 மணி நேரமாக உயர்ந்துள்ளது. அதே நேரத்தில் புத்தகங்கள், செய்தித்தாள்களைப் படிக்கும் நேரம் 25 நிமிஷங்களாகக் குறைந்துள்ளது எனத் தெரிவித்துள்ளது.

புத்தகம் என்பது அறிவுபூர்வமான, ஆக்கபூர்வமான மனநிலையில் நம்மை இயங்க வைக்கும் ஒரு கருவி. அதைக் கையிலெடுப்பதால் தற்சார்பு, தன்னம்பிக்கை, செழிப்பு, மகிழ்ச்சி, மலர்ச்சி, வளர்ச்சி ஏற்படும் என்பது நம் சான்றோர்கள் காட்டிய உண்மை. மேலும், புத்தக வாசிப்பு எழுத்தாளரையும், வாசகரையும் அறிவுத்தளத்தில் ஒன்றாக இயங்கச் செய்து, அறிவாக மாறி, வாழ்க்கையையும் மாற்றி பல சாதனையாளர்களை உருவாக்கி வருகிறது.

அண்மைக்காலமாக சமூக ஊடகங்கள் எதிர்மறைத் தாக்கங்களையே ஏற்படுத்தி அதிக கவனத்தை ஈர்த்து வருகின்றன. அச்சு ஊடகங்கள், மின்ஊடகங்களின் பயன்பாட்டால் ஏற்படும் நேர்மறை, எதிர்மறைத் தாக்கங்களை அறிவியல் ஆய்வுகள் தொடர்ந்து அம்பலப்படுத்தி வருகின்றன. சமூக ஊடகங்களிடம் இருந்து நமது இளைய தலைமுறையினரை எவ்வாறு பாதுகாப்பது என்பது தான் இப்போது அரசுகளின் முன்னுள்ள தலையாய பிரச்னை.

இந்தக்கால சிறார்கள் அதிகமாக தங்களின் முழுத் திறனையும், உயிரனைய காலத்தையும் சமூகவலைதளங்களில் முழுமையாகச் செலவிடுவதால், அவர்களின் கவனம் கல்வியின் பக்கம் செல்லாமல், தவறான பாதையில் செல்வதாக நாளும் வரும் செய்திகள் நாடுகளிடையே அச்சத்தை ஏற்படுத்தி வருகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 01.03.2026 - 07.03.2026

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - மாசி 17

நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : திரையோதசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

சனி உங்கள் ராசியின் பன்னிரண்டாவது வீட்டில் சனி இருப்பதால், இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் அல்லது உடல் பருமன் உள்ளவர்கள் இந்த வாரம் தங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ள வேண்டும், மேலும் பொருத்தமான மற்றும் சரியான நேரத்தில் மருந்து மற்றும் சிகிச்சையை எடுக்க வேண்டும். இன்டர்ன்ஷிப்பிற்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு இந்த நேரம் நல்லதாக இருக்கும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

உங்கள் ராசியுடன் ஒப்பிடும்போது பதினொன்றாம் வீட்டில் சனி பெயர்ச்சிப்பதால், கடந்த வாரத்தை விட இந்த வாரம் உங்கள் உடல்நலம் சிறப்பாக இருக்கும், மேலும் உங்கள் உடல்நலம் மேம்பட்டால் உங்களுக்கு மிகவும் நன்றாக இருக்கும். இந்த வாரம் முதன்மையாக மாணவர்கள் தங்கள் பலவீனங்களை வென்று முன்னேறுவதைப் பற்றியது. எனவே, உங்கள் பலம் மற்றும் பலவீனங்களை நீங்கள் தீர்மானித்து அதற்கேற்ப உங்கள் கடின உழைப்பை விரைவுபடுத்த வேண்டும். மாணவர்கள் சிறந்த நேரங்களுக்காக காத்திருக்க வேண்டியிருக்கும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

உங்கள் ராசியின் முதல் வீட்டில் குரு பெயர்ச்சிப்பதால், இந்த வாரம் கொழுப்பு நிறைந்த உணவுகளைத் தவிர்ப்பது மற்றும் சீரான வழக்கத்தை பராமரிப்பது உங்கள் ஆரோக்கியத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும், உங்கள் உடல் பருமனைக் குறைக்கும் என்றும் உங்கள் ஜாதகம் கூறுகிறது. இந்த வாரம் நீங்கள் எதிர்கொள்ளும் தோல்விகள் உங்கள் தன்னம்பிக்கையை பலவீனப்படுத்தும், இது உங்களைத் தொந்தரவு செய்யக்கூடிய சந்தேகங்களுக்கு வழிவகுக்கும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

சந்திரனுடன் ஒப்பிடும்போது சனி ஒன்பதாவது வீட்டில் இருப்பதால், இந்த வாரம் பொதுவாக உங்கள் ஆரோக்கியத்திற்கு நல்லது, ஆனால் அதிகமாக யோசிப்பது உங்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தும். எனவே, இந்த பழக்கத்தை மேம்படுத்த முயற்சிக்க வேண்டும். இது உங்களை மன அழுத்தமில்லாமல் மற்றும் புத்துணர்ச்சியுடன் உணர வைக்கும். உங்கள் படிப்புக்கு, உடல் செயல்பாடுகளுக்கு சிறிது நேரம் ஒதுக்க முயற்சிக்கவும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

உங்கள் ராசியின் பதினொன்றாவது வீட்டில் குரு இருப்பதால், இந்த வாரம் நீங்கள் மிகவும் ஆரோக்கியமாக உணருவீர்கள். மேலும், உங்கள் பயணங்களும் மிகவும் நன்மை பயக்கும். உங்கள் ஜாதகத்தில் பல நல்ல கிரகங்களின் செல்வாக்கு உங்களுக்கு சாதகமாக உள்ளது. இதற்காக நீங்கள் இணையத்தையும் பயன்படுத்தலாம். இருப்பினும், இந்த நேரத்தில் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கேது உங்கள் சந்திர ராசியின் பன்னிரண்டாவது வீட்டில் இருப்பதால், இந்த வாரம் கூடுதல் எச்சரிக்கையுடன் வாகனம் ஓட்டுங்கள். குறிப்பாக கூர்மையான திருப்பங்கள் மற்றும் சந்திப்புகளில் உங்கள் கண்களையும் காதுகளையும் திறந்து வைத்திருங்கள், இல்லையெனில் நீங்கள் விபத்தில் சிக்கக்கூடும். இன்டர்ன்ஷிப்பிற்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு இந்த நேரம் நல்லதாக இருக்கும். இருப்பினும், எதற்கும் விண்ணப்பிக்கும் முன் உங்கள் அனைத்து ஆவணங்களையும் சேகரிக்க நினைவில் கொள்ளுங்கள்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

உங்கள் தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்ய நீங்கள் எப்போதும் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வது போல் தெரிகிறது, மேலும் இந்த வாரம், உங்களுடைய இந்த அணுகுமுறை உங்கள் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும். இந்த ராசியில் பிறந்தவர்கள் தங்கள் பெரியவர்களுடன் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். இல்லையெனில், உங்கள் பிம்பத்திற்கு குறிப்பிடத்தக்க சேதம் ஏற்படும் அபாயம் அதிகம்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

உங்கள் ராசியின் ஐந்தாவது வீட்டில் சனி பெயர்ச்சிப்பதால், இந்த காலம் உங்கள் ஆரோக்கியத்திற்கு மிகவும் நன்மை பயக்கும். நீங்கள் ஒவ்வொரு பணியையும் முழு பலத்துடன் முடிக்கவும், நல்ல ஆரோக்கியத்தை அனுபவிக்கவும் பாடுபடுவீர்கள். சில செயல்பாடுகள் உங்களைத் திசைதிருப்பக்கூடும், இதன் விளைவாக உங்கள் அனைத்து முயற்சிகளிலும் தோல்வி ஏற்படும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

உங்கள் ராசியின் நான்காவது வீட்டில் சனி இருப்பதால், உங்கள் தோள்களில் நிறைய இருக்கிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள், மேலும் தெளிவான சிந்தனை முடிவுகளை எடுப்பது அவசியம். இந்த வாரம் மாணவர்களுக்கு மிகவும் சாதகமாக இருக்கும், ஏனெனில் உங்கள் பெற்றோர் உங்கள் கடின உழைப்பால் மகிழ்ச்சியடைவார்கள். இதன் விளைவாக, உங்களுக்கு ஒரு புதிய புத்தகம் அல்லது மடிக்கணினி கிடைக்கக்கூடும்,

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

சந்திர ராசியிலிருந்து எட்டாவது வீட்டில் கேது இருப்பதால், இந்த வாரம் சிலர் உடல்நலப் பிரச்சினைகள் காரணமாக மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியிருக்கும். இந்த நேரத்தில், உங்கள் துறையில் முன்னேற்றத்திற்கான பல வாய்ப்புகளைப் பெறுவீர்கள். நீங்கள் உயர் கல்வியில் ஈடுபட்டிருந்தால், இந்த வாரம் வெற்றிக்கான பல வாய்ப்புகளைக் காண்பீர்கள். கல்வியை முடித்து வேலை தேடுபவர்களுக்கும் சாதகமான வாய்ப்புகள் கிடைக்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

உங்கள் சந்திர ராசியின் (வு) முதல் வீட்டில் ராகு இருப்பதால், இந்த வாரம் உங்கள் உடல்நலம் குறித்து நீங்கள் சற்று அதிக விழிப்புடன் இருப்பீர்கள். இந்த வாரம், உங்கள் மூத்த சகோதரர் அல்லது சகோதரி ஒரு விஷயத்தைப் புரிந்துகொள்ள உங்களுக்கு உதவுவார்கள், இது உங்கள் கடந்தகால மன அழுத்தத்தைக் குறைக்க உங்களை அனுமதிக்கிறது. இருப்பினும், உங்கள் படிப்பில் மட்டும் உங்களை மட்டுப்படுத்துவதற்குப் பதிலாக, நீங்கள் பாடநெறிக்கு அப்பாற்பட்ட செயல்களில் தீவிரமாக பங்கேற்க வேண்டும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]


உங்கள் ராசியின் முதல் வீட்டில் சனி இருப்பதால், இந்த வாரம் நீங்கள் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் நன்றாக உணருவீர்கள். இதற்குப் பின்னால் உள்ள உண்மையான காரணத்தை நீங்கள் கண்டறிந்ததும், நீங்கள் மிகுந்த மன அமைதியை உணர்வீர்கள். இருப்பினும், இந்த நேரத்தில் அவர்களிடம் பேசும்போது, உங்கள் வார்த்தைகளை மிகவும் கவனமாகப் பயன்படுத்துங்கள். உங்களை மன அழுத்தமின்றி புத்துணர்ச்சியுடன் உணர வைக்கும். எனவே, இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, உங்கள் படிப்புக்கு கூடுதலாக உடல் செயல்பாடுகளுக்கு சிறிது நேரம் ஒதுக்க முயற்சிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவாழ்வில் நேர்மையையும் எளிமையையும் உருவகப்படுத்தி நின்ற தோழர் நல்லகண்ணு!



வீரகத்தி தனபாலசிங்கம்



சென்னையில் கடந்த புதன் கிழமை தனது 101 வயதில் காலமான இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முதுபெரும் தலைவ!ர் ஆர். நல்லகண்ணுவுக்கு அஞ்சலி செய்து 'தினமணி' பத்திரிகை மறுநாள் எழுதிய ஆசிரிய தலையங்கத்துக்கு 'இனி யாருண்டு இது போல...' என்று தலைப்பிட்டிருந்தது. அவரின் மறைவுக்கு பிறகு பொதுவாழ்வில் நேர்மைக்கும் கண்ணியத்துக்கும் எடுத்துக்காட்டாக உலகில் உயிருடன் இருக்கும் எவரையாவது காட்டமுடியும் என்பது சந்தேகமே.

நல்லகண்ணுவின் மறைவு தமிழ்நாட்டு அரசியலில் தனிப்பட்ட அர்ப்பணிப்பு, கொள்கைப்பற்று மற்றும் சமூகநீதி மீதான நீடித்த பற்றுறுதி ஆகியவற்றினால் வரையறை செய்யப்பட்ட பொது வாழ்வைக் கொண்ட - தனித்துவமான அடையாளச் சின்னங்களாக விளங்கிய ஒரு தலைமுறைத் தலைவர்களினால் வடிவமைக்கப்பட்ட ஒரு யுகத்தின் முடிவைக் குறித்து நிற்கிறது.

நல்லகண்ணு தமிழ்நாட்டில் தனது மார்க்சிய சமகாலத்தவரும் தோழருமான என். சங்கரையாவுக்கு பிறகு நூறு வருட வாழ்க்கையையும் பல தசாப்தகால அரசியல் வாழ்வையும் கொண்ட இரண்டாவது முதுபெரும் கம்யூனிஸ்ட் தலைவராவார். சங்கரையா அவரது 101 வயதில் 2023 ஆம் ஆண்டு காலமானார்.

நல்லகண்ணுவின் எளிமை, நேர்மை மற்றும் கண்ணியம் நிறைந்த வாழ்க்கை தார்மீக வெற்றிடத்தைக் கொண்டதாக விளங்கும் நவீன அரசியல் பரப்பில் முற்றிலும் மாறுபட்டதாக விளங்கியது. பகட்டாரவாரமும் பணமும் அதிகார வேட்கையும் ஆக்கிரமித்து நிற்கும் ஒரு யுகத்தில் அவர் அரசியலில் எளிமை, ஒளிவுமறைவற்ற தன்மை மற்றும் நேர்மையான அணுகுமுறையை நியாயப்படுத்திக் குரல்கொடுத்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வரலாறும் நல்லகண்ணுவின் வாழ்வும் சமாந்தரமானவை. தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்தின் சிறிவைகுண்டத்தில் 1924 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி நல்லகண்ணு பிறந்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 1925 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி தாபிக்கப்பட்டது.

கம்யூனிஸ்ட் தொண்டர்களினால் 'தோழர் ஆர்.என்.கே.' என்று அன்புடன் அழைக்கப்பட்ட நல்லகண்ணுவின் பிறந்தநாள் நூற்றாண்டு நிறைவு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு நிறைவாகவும் அமைந்தமை அவரின் வாழ்வும் கம்யூனிஸ்ட் இயக்கமும் இணை பிரிக்க முடியாதவை என்பதை காட்டியது.

பெரும்பாலும் இந்தியாவின் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முதுபெரும் தலைவர்கள் அனைவரையும் போன்று நல்லகண்ணுவின் அரசியல் வாழ்வும் சுதந்திரப் போராட்டத்திலும் காங்கிரஸ் இயக்கத்திலும் தான் ஆரம்பித்தன. பள்ளியில் படிக்கும் காலத்திலேயே சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்க வேண்டும் என்ற விருப்பமும் சாதியப் பாகுபாடுகளுக்கு எதிராகப் போராடும் பண்பும் நல்லகண்ணுவிடம் வளரத் தொடங்கியது.

அநீதிகளுக்கு எதிராகப் போராடும் இயல்புணர்ச்சி கொண்டவரான நல்லகண்ணுவினால் காங்கிரஸ் இயக்கத்தில் நீண்ட நாட்கள் பயணம் செய்ய முடியவில்லை. தூத்துக்குடியில் இயங்கிய கம்யூனிஸ்ட் கட்சிக் குழுவுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்ட அவர், தனது பள்ளி ஆசிரியர் ஒருவரின் வழிகாட்டுதலில் 1943 ஆம் ஆண்டில் தனது 19 வயதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்துகொண்டார்.

தோழர் ஜீவாவின் உரைகளும் தொ. மு. சிதம்பர ரகுநாதனின் நட்பும் அவர் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. ஒரு கட்டத்தில் ஜீவாவின் உதவியுடன் கம்யூனிஸ்ட் கட்சியின் நாழிதளான 'ஜனசக்தி' யில் பத்திரிகையாளராக பணியாற்றிய அனுபவமும் நல்லகண்ணுவுக்கு இருந்தது. அவர் ஒரு சிறந்த எழுத்தாளர், நேர்த்தியான பேச்சாளர். மக்களை உணர்ச்சிவசத்துக்கு உள்ளாக்காமல் முதிர்ச்சியை நோக்கி நகர்த்தும் வகையில் தான் அவரது பேச்சும் எழுத்தும் இருக்கும்.

தொடக்க காலத்தில் மார்க்ஸ், லெனின் போன்ற கம்யூனிஸ்ட் பிதாமகர்களின் நூல்கள் தங்களுக்கு கிடைக்கவில்லை என்றும் ஜவஹர்லால் நேருவின் நூல்களின் மூலமாகவே கம்யூனிஸ்ட் இயக்கம் பற்றி அறிந்து கொண்டதாகவும் நல்லகண்ணு கூறியிருக்கிறார். அதே நேருவின் தலைமையிலான காங்கிரஸ் அரசாங்கம் கம்யூனிஸ்ட் கட்சியை 1948 ஆம் ஆண்டில் தடை செய்தபோது நல்லகண்ணு தலைமறைவாக வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்கு முன்னதாக பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் கம்யூனிஸ்ட் கட்சியை தடைசெய்த வேளையிலும் அவர் தலைமறைவாக இயங்கினார்.

மகாத்மா காந்தி இறந்த போது அல்பேர்ட் அயன்ஸ்டீன் "எலும்புடனும் சதையுடனும் இவ்வாறு ஒரு உருவம் உலகில் நடமாடியது என்று சொன்னால் எதிர்காலச் சந்ததிகள் நம்ப மறுக்கும்" என்று சொன்னார். நல்லகண்ணு விடயத்திலும் அதுவே உண்மை.

தலைமறைவாக இருந்த வேளையில் கைது செய்யப்பட்ட நல்லகண்ணு பொலிசாரின் கொடூரமான சித்திரவதைக்கு ஆளானார். மற்றைய கம்யூனிஸ்ட் தோழர்கள் மறைந்திருந்த இடங்களை காட்டித் தருமாறு கேட்டு சித்திரவதை செய்த பொலிஸ் அதிகாரி நல்லகண்ணுவின் அடர்த்தியான மீசையைச் சிகரெட்டினால் சுட்டுப் பொசுக்கியதனால் அன்று தொடக்கம் மீசைவைக்கும் வழக்கத்தை அவர் கைவிட்டுவிட்டார்.

1952 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதலாவது பாராளுமன்ற தேர்தலில் கம்யூனிஸ்ட் வேட்பாளர்கள் கணிசமான தொகுதிகளில் வெற்றி பெற்று பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியாக வந்தார்கள். அப்போது இந்தியா பூராவும் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக தொடரப்பட்ட சதி வழக்குகளை இரத்துச் செய்யக்கோரிய போராட்டங்கள் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தீவிரமடைந்தன.

வேறு வழியின்றி பெரும்பாலான சதி வழக்குகளை காங்கிரஸ் அரசாங்கம் மீளப் பெற்றது. அதன் விளைவாக நெல்லை சதிவழக்கில் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்ட நல்லகண்ணு மற்றும் பாலதண்டாயுதம் உட்பட கம்யூனிஸ்டுகள் பலர் விடுதலையாகினர். ஆனால், வெடிகுண்டு வைத்திருந்த வழக்கும் நல்லகண்ணு மீது இருந்ததால் அவர் மேலும் ஐந்து வருடங்கள் சிறையில் தண்டனைக் காலத்தை கழிக்க வேண்டியிருந்தது.

ஏழு வருடங்கள் சிறைவாழ்வுக்கு பின்னர் 1956 டிசம்பரில் மதுரை சிறையில் இருந்து விடுதலையான நல்லகண்ணு முன்னரை விடவும் தீவிரமாக கட்சிப் பணிகளில் ஈடுபடத் தொடங்கினார். இரண்டு வருடங்களுக்கு பிறகு கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தோழர் ஒருவரின் மகளானா பள்ளி ஆசிரியரை ரஞ்சிதத்தை திருமணம் செய்து கொண்டார். அது ஒரு சாதிக்கலப்பு திருமணமாகும்.

இந்திய - சீனப்போர் மற்றும் சோவியத் யூனியனுக்கும் சீனாவுக்கும் இடையிலான தத்துவார்த்தப் போரைத் தொடர்ந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 1964 ஆம் ஆண்டில் பிளவுபட்டபோது பிரிந்து சென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை அமைத்தவர்களுடன் நல்லகண்ணு செல்லவில்லை. 1992 ஆம் ஆண்டில் இருந்து மூன்று பதவிக் காலங்களுக்கு மொத்தமாக 13 வருடங்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் நாடு மாநில செயலாளராக நல்லகண்ணு பணியாற்றினார்.

அறுபது வருடங்களுக்கு முன்னர் கம்யூனிஸ்ட் கட்சியில் பிளவு ஏற்படுவதற்கு காரணமாக இருந்த பிரச்சினைகள் இனி மேலும் பொருத்தமற்றவை என்று நம்பிய நல்லகண்ணு இரு கம்யூனிஸ்ட் கட்சிகளையும் இணைப்பதற்கு கடுமையாகப் பாடுபட்டார். ஆனால், அவரின் வாழ்நாளில் அது சாத்தியமாகவில்லை.

சிக்கனத்துடன் கூட சீராக வாழமுடியும் என்று நிரூபித்துக் காட்டிய நல்லகண்ணு சமூகத்தின் நலன்களுக்கும் கட்சியின் வளர்ச்சிக்கும் தான் முன்னுரிமை அளித்தார். தனது அரசியல் நடவடிக்கைகளினால் மனைவிக்கும் மகள்மாருக்கும் நெருக்கடி வந்துவிடக் கூடாது என்பதற்காக குடும்பத்தில் இருந்து அவர் விலகியிருந்த நாட்களும் உண்டு.

தனது கோட்பாட்டின் மீது வலிமையான பற்றுறுதி கொண்டவரான நல்லகண்ணு மிகவும் எளிமையான மனிதர். மென்மையான சுபாவம் கொண்டவர். அதிகாரத்துக்கும் சொத்துக்கும் அவர் ஒருபோதும் ஆசைப்பட்டதில்லை.

தமிழ்நாடு அரசாங்கம் நல்லகண்ணுவுக்கு 2022 ஆம் ஆண்டில் 'தகைசால் தமிழர்' விருதை வழங்கிக் கௌரவித்த போது 15 இலட்சம் ரூபா பணப்பரிசும் கொடுக்கப்பட்டது. அவர் அந்த பணத்தை முதலமைச்சர் நிவாரண நிதியத்துக்கு நன்கொடையாக வழங்கினாரே தவிர, வீட்டுக்கு எடுத்துச் செல்லவில்லை.

கம்யூனிஸ்ட் கட்சியின் தொண்டர்கள் நல்லகண்ணுவுக்கு ஒரு கோடி ரூபாவையும் கார் ஒன்றையும் பரிசாக வழங்கிய போது அவற்றை அவர் கட்சிக்கே நன்கொடையாக வழங்கிவிட்டார்.

சென்னையில் அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட அளவான வீடு ஒன்றுக்கு 5,700 ரூபா வாடகை செலுத்தி வாழ்ந்து வந்த நல்லகண்ணுவின் குடும்பம் கம்யூனிஸ்ட் கட்சி அவருக்கு வழங்கிய 2,500 ரூபா சம்பளத்திலும் மனைவியின் 4,500 ரூபா ஓய்வூதியத்திலும் வாழ்க்கையை நடத்தியது. சிக்கனத்தை ஆதாரமாகக் கொண்ட கோட்பாடு ஒன்று இல்லாமல் சமூக மாற்றம் இடம் பெற முடியாது என்பதில் அவர் உறதியான நம்பிக்கை கொண்டவர். சமரசமற்ற நேர்மைக்கு பிரகாசமான உதாரணமாக அவர் விளங்கினார்.

சென்னை தியாகராஜ நகரில் நல்லகண்ணு வாடகைக்கு வசித்து வந்த வீட்டின் கட்டிடத் தொகுதியை இடித்து புதிதாக நிர்மாணம் செய்வதற்காக அங்கிருந்து வெளியேறுமாறு 2019 மே மாதம் மாநில அரசாங்கம் அவரைக் கேட்டுக் கொண்டது. அப்போது மனைவியை மூன்று வருடங்களுக்கு முன்னர் இழந்த அவர் அமைதியாக அங்கிருந்து வெளியேறி சென்னையில் வேறு பகுதியில் வாழ்ந்த ஒரு மகளின் வீட்டுக்கு சென்றுவிட்டார். அந்த சம்பவம் குறித்து தெரிய வந்ததும் கடுமையான கண்டங்கள் கிளம்பின.

அது குறித்து செய்தியாளர்கள் நல்லகண்ணுவிடம் கேட்டபோது வீட்டில் இருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது வேதனைக்குரியது என்றபோதிலும், இன்னொரு வீட்டை தனக்கு அரசாங்கம் ஒதுக்கித் தராததால் பிரச்னை எதுவுமில்லை என்று பதிலளித்தார்.

ஆனால், தன்னைப் போன்று வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்ட காலஞ்சென்ற காங்கிரஸ் அமைச்சர் பி. கக்கனின் குடும்பத்தவர்களுக்கு மாற்று வீடு ஒன்றை வழங்குமாறு நல்லகண்ணு அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார். பொதுவாழ்வில் சுயநலமின்றி எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு அந்த விவகாரத்தை அவர் கையாண்ட முறை ஒரு சிறந்த உதாரணம்.

ஆனால், இத்தகைய அர்ப்பணிப்புச் சிந்தையுடைய - வாழ்நாள் முழுவதும் ஏழை எளிய மக்களின் நலன்களுக்காக பாடுபட்ட நல்லகண்ணுவை தமிழ்நாட்டு மக்கள் தங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக பாராளுமன்றத்துக்கோ அல்லது மாநில சட்டசபைக்கோ ஒருபோதும் தெரிவு செய்யவில்லை.

அவரது உடலை குடும்பத்தினர் மருத்துவ ஆராய்ச்சிக்காக கையளித்தனர். உயிரோடிருந்தபோது மக்களுக்கு ஒரு பாடமாக விளங்கிய நல்லகண்ணு இறந்த பின்னரும் மருத்துவ மாணவர்களுக்கு பாடமாக அமையப் போகிறார்.

மகாத்மா காந்தி இறந்த போது அல்பேர்ட் அயன்ஸ்டீன் "எலும்புடனும் சதையுடனும் இவ்வாறு ஒரு உருவம் உலகில் நடமாடியது என்று சொன்னால் எதிர்காலச் சந்ததிகள் நம்ப மறுக்கும்" என்று சொன்னார். நல்லகண்ணு விடயத்திலும் அதுவே உண்மை. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சிமுறை பொருளாதாரத்துக்கு ஒரு பின்குறிப்பாக இருக்க முடியாது!



கலாநிதி ஜெகான் பெரேரா

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ இயக்குநர் கிறிஸ்ராலினா ஜோர்ஜீவாவின் இலங்கை விஜயம் அரசாங்கத்துக்கு ஒரு வெற்றி என்று பரவலாக வர்ணிக்கப்பட்டது. இலங்கையையும் அபிவிருத்திக்கான அதன் ஆற்றலையும் தாராளமாக அவர் பாராட்டினார். இந்த வெற்றிக்கும் ஒத்துழைப்பு உணர்வுக்குமான அடிப்படைகளை இலங்கை சர்வதேச வங்குரோத்து நிலையை பிரகடனம் செய்த பிறகு 2023 மார்ச் மாதத்தில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் தொடக்கத்திலேயே காணமுடியும். சர்வதேச நாணய நிதியம் இறுதிப்புகலிட கடன் வழங்குநராக அதன் பாத்திரத்தை நிறைவு செய்வதற்கு வந்தது.

அன்றைய அரசாங்கம் வேறு வழியின்றி விரும்பத்தகாத காரியத்தைச் செய்தது. அது மக்களால் விரும்பப்படாத கொள்கைகளை மிகவும் குறிப்பாக,கணிசமான வரி அதிகரிப்புகளை அவர்கள் மீது திணித்தது. நாட்டில் அந்நிய செலாவணிக் கையிருப்பு தீர்ந்துபோய், கடனை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் எரிபொருள், மருந்து மற்றும் உணவு வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவிய ஒரு தருணத்தில் சர்வதேச நாணய நிதியத்தின். உதவித்திட்டம் உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் ஓரளவு நம்பிக்கையை ஏற்படுத்தியது.

1965 ஆம் ஆண்டில் இருந்து இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன் கைச்சாத்திட்ட 16 உடன்படிக்கைகளில் எந்தவொன்றுமே அதன் தவணையை முழுமையாக பூர்த்தி செய்யவில்லை. தற்போதையது 17 வது உடன்படிக்கையாகும். சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைகள் பாரம்பரியமாக பொருளாதார மறுசீரமைப்பு மீதே கவனத்தைச் செலுத்தி வந்திருக்கின்றன. பெரும்பாலும் உடன்படிக்கையின் நிபந்தனைகள் மக்கள் மீது கடுமையான சுமைகளை ஏற்றின. நாணய நிதியத்திடமிருந்து கடன் வாங்கிய நாடுகள் அதை திருப்பிச் செலுத்துவதை உறுதிசெய்வதற்கே அந்த நிபந்தனைகள் முன்னுரிமை கொடுத்து வந்திருக்கின்றன.

நிதி நிலைத்தன்மையை வலுப்படுத்தல், வரி அதிகரிப்புகள், மானியக் குறைப்புகள் மற்றும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகள் தொடர்ச்சியான அம்சங்களாக இருந்து வருகின்றன. அதன் விளைவான சமூக மற்றும் அரசியல் விலை மிகவும் உயர்ந்ததாக இருந்தது. அரசாங்கங்கள், மக்களின் ஆதரவை இழந்து, சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்திட்டம் பூர்த்தியடைவதற்கு முன்னதாகவே பதவி கவிழ்ந்தன. சமூகப் பாதுகாப்பு இல்லாத பேரினப் பொருளாதார மறுசீரமைப்பு மக்களிடமிருந்து எதிர்ப்பு, உறுதிப்பாடின்மை மற்றும் கொள்கை மறுதலை மாற்றங்களை தோற்றுவித்திருக்கிறது என்பதை உலகம் பூராவுமான அதன் அனுபவத்தில் இருந்து சர்வதேச நாணய நிதியம் கற்றுக் கொண்டிருக்கிறது.

யூரோ நெருக்கடியின்போது சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்பாடுகளில் கிரேக்கம், அயர்லாந்து மற்றும் போர்த்துக்கல் போன்ற நாடுகள் பெற்ற அனுபவங்கள் (அந்த நாடுகளின் பொருளாதாரங்கள் பின்னர் நிலையுறுதியடைந்து வளர்ச்சி மீண்டும் ஏற்பட்ட போதிலும்) சிக்கனத் திட்டங்களின் விளைவான அரசியல் மற்றும் சமூகப் பாதிப்புக்களை வெளிக்காட்டின. சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளின் படிமுறை வளர்ச்சி தற்போதைய உடன்படிக்கையில் இரு விசேட அம்சங்கள் இருப்பதை உறுதிசெய்து கொண்டன.

முதலாவதாக, சிக்கன நடவடிக்கைகள் சனத்தொகையின் வறிய பிரிவினர் மீது செலுத்தக்கூடிய தாக்கங்களை தணிப்பதற்கு சமூக நலன்புரிச் செலவினங்களின் பாதுகாப்பு ஏற்பாடு ஒன்றை சர்வதேச நாணய நிதியம் உள்ளடக்கியிருக்கிறது. சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் உயிர்வாழ்வுக்காக போராடிக் கொண்டிருக்கும்போது வருடாந்தம் 7 - 8 சதவீத பொருளாதார வளர்ச்சியை அடைய முடியும் என்று எந்தவொரு நாடும் எதிர்பார்க்க முடியாது. சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையுடன் சேர்த்து வகுக்கப்பட்ட. அஸ்வேசும செயற்திட்டத்தின் வறுமை ஒழிப்பு நடவடிக்கைகள், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் மட்டுப்படுத்தப் பட்டவேலை வாய்ப்புகளின் விளைவான மோசமான தாக்கங்களை தணிப்பதற்கு முக்கியமானவையாக இருக்கின்றன.

பொருளாதார மறுசீரமைப்புடன் இணைந்ததாக ஆட்சிமுறைப் பிரமாணங்களை நடைமுறைப்படுத்துவதையும் உள்ளடக்கியது சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையின் இரண்டாவது முக்கிய அம்சமாகும். இது திரும்பத் திரும்ப இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடம் ஏன் செல்ல வேண்டியிருக்கிறது என்பதை உணர்த்துகிறது. தவறான பொருளாதார முகாமைத்துவம் ஒரு வெற்றிடத்தில் இடம்பெற்றதில்லை. பலவீனமான நிறுவனங்கள், அரசியல்மயப்பட்ட தீர்மானங்கள், வெளிப்படைத்தன்மை இல்லாத கொள்வனவுகள் மற்றும் அரச நிறுவனங்கள் மீதான கண்காணிப்பு அருகிப்போனமை போன்றவையே தவறான பொருளாதார முகாமைத்துவத்துக்கு காரணமாகும்.

சர்வதேச நாணய நிதியம் அதன் பொருளாதார மறுசீரமைப்புச் செயன்முறையில் ஆட்சிமுறையுடன் தொடர்புடைய விவகாரங்களை பற்றிய மதிப்பீட்டையும் உள்ளடக்கியிருக்கிறது. இந்த விவகாரங்களின் பட்டியலில் முதன்மையாக இருப்பது ஊழல் பிரச்சினையை கையாளுவதாகும். ஒப்பந்தங்களை பகிரங்கப்படுத்தல், பகிரங்கமாக கேள்விப்பத்திரங்களை கோருவதை உறுதிப்படுத்தல், நிதிப் பொறுப்புக்கூறலுக்கான பொறிமுறைகளை வலுப்படுத்துதல் ஆகியவை இதில் அடங்கும்.

செம்மையான ஆட்சிமுறை தொடர்பில் சிவில் சமூகம் யோசனைகளை முன்வைப்பதையும் ஊக்கப்படுத் திய சர்வதேச நாணய நிதியம் கிரமமாக சிவில் சமூக அமைப்புகளுடன் செயற்படுவதில் ஈடுபாடு காட்டியது. ட்ரான்ஸ்பெரன்சி இன்டர்நாஷனல் மற்றும் வெறைற் றிசேச் நிறுவனத்தின் உதவியுடன் ஆட்சிமுறைப் பிரச்னைகள் தொடர்பில் சிவில் சமூகம் செய்த ஆய்வு ஆட்சிமுறையைச் செம்மையாகுவதற்கு செய்ய வேண்டியவை என்று சர்வதேச நாணய நிதியம் அடையாளம் கண்ட வழிமுறைகளை விடவும் பரந்த வீச்செல்லையைக் கொண்டவையாக இருந்தன. குறுகிய நிதியியல் அக்கறைகளுக்கு அப்பால் முறைமை சார்ந்த பலவீனங்களை அது சுட்டிக் காட்டியது.



சர்வதேச நாணய நிதியத்தின் தற்போதைய உதவித்திட்டம் பொருளாதாரத்தை நிலையுறுதிப்படுத்துவதற்கான வாய்ப்பைக் கொடுப்பது மாத்திமல்ல, அதை உறுதிசெய்யும் நிறுவனங்களை பலப்படுத்தவும் செய்யும். அந்த வாய்ப்பை தவறாமல் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அது இல்லாமல் முதடுகளைக் கவரவோ, ஏற்றுமதிகளை விஸ்தரிக்கவோ, கடன்பொறியில் இருந்து நாட்டை மீட்கக்கூடிய 7 - 8 சதவீத வளர்ச்சியையும் சுபிட்சத்தையும் அடையவோ முடியாது.

பொருளாதார மறுசீரமைப்புக்காக தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் தொழிலாளர் நம்பிக்கை நிதியத்தை இலக்கு வைத்தல், பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் இணையவெளி பாதுகாப்புச் சட்டம் போன்ற சட்டங்களை நீக்குவது போன்ற சமூக நீதிப் பிரச்சினைகளை சிவில் சமூகம் முன்வைத்த யோசனைகள் உள்ளடக்கியிருந்தன.

போதுமான கலந்தாலோசனை இன்றி தங்களது ஓய்வுகால சேமிப்புக்கள் மறுசீரமைப்புக்கு உள்ளாக்கப்படுவதை தொழிலாளர்கள் காணும்போது கொள்கை வகுக்கும் செயல்முறைகளின் மீதான நம்பிக்கை அருகிப்போகிறது. அடாத்தான முறையில் அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கான கருவிகளாக சட்டங்கள் மீது சந்தேகம் வரும்போது சமூக ஒட்டிணைவு பலவீனமடைகிறது.

கடந்த வாரம் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ இயக்குநருக்கும் சிவில் சமூக உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பு ஒன்றின்போது ஆட்சிமுறை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டது. அதில் அவர் சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கு பழக்கமான ஒரு முறையிலேயே பேசினார். செம்மையான ஆட்சிமுறைக்கான சிவில் சமூகத்தின் யோசனைகள் அடங்கிய அறிக்கை மூன்று தசாப்தகால போருக்கு வழிவகுத்த இனஉறவுகள் முறவு குறித்தும் அதன் விளைவான மோசமான பொருளாதார இழப்பு குறித்தும் குறிப்பிட்டிருந்தது. இது குறித்தும் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

ஆட்சிமுறை என்பது கணக்கியல் தராதரங்கள். மற்றும் கொள்வனவு விதிமுறைகளைப் பற்றியது மாத்திரமல்ல. அது சமூகநீதி, சட்டத்தின் முன் சமத்துவம் மற்றும் அரசியல் பிரதிநிதித்துவம் பற்றியதாகும். இது விடயத்தில் அரசாங்கம் செய்வதற்கு பல காரியங்கள் இருக்கின்றன. உயர்மட்ட அரசாங்க குழுக்களில் தாங்களுக்கு போதுமானளவு பிரதிநிதித்துவம் இல்லை என்று சிறுபான்மைச் சமூகங்கள் உணருகின்றன. மாகாண மட்டத்தில் இனத்துவ மற்றும் சிறுபான்மைச் சமூகப் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்த மாகாணசபை முறை முடங்கிப்போய்க் கிடக்கிறது.

ஆட்சிமுறைப் பிரச்சினைகளின் முக்கியத்துவம் சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையுடன் மாத்திரம் தொடர்புடையவையல்ல. அவை ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து வரிச்சலுகைகளைப் பெறுவதற்கும் முக்கியமானவை. ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்பட்ட ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை இலங்கையின் ஏற்றுமதிகள் குறைந்த விலைகளில் விற்பனை செய்யப்படுவதற்கும் ஐரோப்பிய சந்தைகளில் வாய்ப்புக்களைப் பெறுவதற்கும் உதவுகிறது. ஏற்றுமதியில் தங்கியிருக்கும் ஒரு பொருளாதாரத்துக்கு இது முக்கியமானதாகும். அத்தகைய சலுகைகள் இழக்கப்படும் பட்சத்தில் ஆடை உற்பத்தி போன்ற முக்கியமான தொழிற்துறைகளில் வேலைவாய்ப்புக்கள் நேரடியாகப் பாதிக்கப்படும். நாட்டில் மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் உரிமைகள் பாதுகாப்பு தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் நீண்டகாலமாகக் கொண்டிருக்கும் அக்கறைகளை அரசாங்கம் கையாள வேண்டியது அவசியமாகும்.

ஐரோப்பிய ஒன்றியம் பல வருடங்களாக சர்வதேச சாசனங்களை இலங்கை பின்பற்றி செயற்படவேண்டிய அவசியத்தையும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை தொடர்ந்து வழங்குவதையும் தொடர்புபடுத்தி வந்திருக்கிறது. பயங்கரவாத தடைச்சட்டத்தை சர்வதேச தராதரங்களுக்கு ஏற்றமுறையில் மாற்றியமைக்க வேண்டும் என்ற நிபந்தனையும் இதில் அடங்கும். பயங்கரவாத தடைச் சட்டத்தை பதிலீடு செய்வதற்காக அரசாங்கம் முன்வைத்திருக்கும் பயங்கரவாதத்தில் இருந்து அரசைப் பாதுகாப்பதற்கான உத்தேச சட்டம் குறைந்தளவு துஷ்பிரயோகம் குறித்து எழுத்தில் கூறுகிறதே தவிர மற்றும்படி பரந்தளவில் வீச்செல்லையைக் கொண்டதாகவும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் முக்கியமான அம்சங்களை உள்ளடக்கியதாகவும் இருக்கிறது.

பொருளாதார அபிவிருத்திக்கான முயற்சிகளில் ஆட்சிமுறையும் சமூகநீதியும் அலட்சியம் செய்யப்படவோ குறைத்து மதிப்பிடப்படவோ முடியாத காரணிகளாகும். இலங்கை அதன் நெருக்கடிச் சுழற்சியில் இருந்து விடுபட்டு வெளியேற வேண்டுமானால், சமூகநீதியையும் அபிவிருத்தியின் பயன்களின் நேர்மையான விநியோகத்தையும் மேம்படுத்தும் நல்லாட்சி முறையை உள்வாங்க வேண்டும். அதுவே நீடித்த பொருளாதார வளர்ச்சியை கட்டியெழுப்புவதற்கான அத்திபாரமாகும்.

அது இல்லாவிட்டால் உறுதிப்பாடு என்பது சஞ்சலமானதாகவும் வறுமை உயர்ந்த மட்டத்திலும் இருக்கும். 7 - 8 சதவீத வளர்சியைக் காண்பது என்ற வாக்குறுதி தொடர்ந்து நழுவிக்கொண்டே போகும். ஆட்சிமுறை மறுசீரமைப்பு நடைமுறைப்படுத்தல் ஆக்கபூர்வமான ஆட்சிமுறைப் பொறிமுறையின் ஊடாக நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

பிணைமுறிகளுடன் தொடர்புபட்ட ஆட்சிமுறை வளர்ச்சியில் இலங்கையின் சிந்தனைக் குழாம் வெறைற் றிசேச் முக்கியமான பாத்திரத்தை வகிக்கிறது. செலுத்தப்பட வேண்டியிருக்கும் கடன்கள் மீதான வட்டி வீதத்தை அவர்கள் குறைக்கிறார்கள்.

சிறந்த ஆட்சிமுறை இலங்கைக்கு கடன் கொடுத்தவர்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களைக் குறைக்கும். இது ஆட்சிமுறை மறுசீரமைப்புக்கான நேரடி நிதிச் சன்மானமாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் தற்போதைய உதவித்திட்டம் பொருளாதாரத்தை நிலையுறுதிப்படுத்துவதற்கான வாய்ப்பைக் கொடுப்பது மாத்திமல்ல, அதை உறுதிசெய்யும் நிறுவனங்களை பலப்படுத்தவும் செய்யும். அந்த வாய்ப்பை தவறாமல் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அது இல்லாமல் முதடுகளைக் கவரவோ, ஏற்றுமதிகளை விஸ்தரிக்கவோ, கடன்பொறியில் இருந்து நாட்டை மீட்கக்கூடிய 7 - 8 சதவீத வளர்ச்சியையும் சுபிட்சத்தையும் அடையவோ முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறும்வாய் சப்பும் இனவாதிகளுக்கு சுரேஸ் சாலே நல்ல அவலாகியுள்ளார்!

பனங்காட்டான்

தமிழ் மக்கள் தொடர்பாகவும் அவர்களின் தமிழ் தேசிய செயல்பாடுகள் தொடர்பாகவும் இனவாதம் கக்கிவருபவர்களுக்கு அவ்வப்போது புதிதுபுதிதாக ஏதோஒன்று கிடைத்துவிடும்.

இலங்கையின் அரச புலனாய்வு பணிப்பாளராக விருந்தசுரேஸ் சாலேயின் கைது இப்போது இவர்களுக்கு ஓர் ஆயுதமாகக் கிடைத்துள்ளது. ராணுவ மேஜர் ஜெனராலாக பதவிவகித்த இவர் கடந்த காலங்களில் முக்கியமாகராஜபக்சக்களின் ஆட்சிக் காலத்தில் செல்லப்பிள்ளையாக இருந்தவரென கூறப்படுவதுண்டு.

ஈஸ்டர் நாளில் கத்தோலிக்க தேவாலயங்களில் சிறப்பு ஆராதனை இடம்பெறும். 2019 ஏப்ரல் 21ம் திகதி ஈஸ்டர் நாளன்று கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய நகரங்களில் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டதில் 269 அப்பாவிப் பொதுமக்களும் 45 வெளிநாட்டவர்களும் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. சுமார் 500 பேர் வரை காயமடைந்தனர்.







தேசிய தௌவீத் ஜமாத் என்ற உள்நாட்டு இஸ்லாமிய அமைப்பும் சர்வதேச இஸ்லாமிய அமைப்பும் இதில் சம்பந்தப்பட்டதாக அப்போது கூறப்பட்டது. 2019 மார்ச் 15ம் திகதி கிறீஸ்சேர்ச் பள்ளிவாசல் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின் எதிரொலியாக ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டது என்று அப்போதைய பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் றுவான் விஜேவர்த்தன (ரணில் விக்கிரமசிங்கவின் தாய்மாமன் மகன்) அறிவித்திருந்தார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக நீதியும் நேர்மையுமான விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை என்று கத்தோலிக்க திருச்சபை தொடர்ந்து தெரிவித்து வந்தது. கைதாகி தடுப்புக் காவலில் இருக்கும் பிள்ளையானிடம் இது தொடர்பாக விசாரிக்கப்பட்டதாக அரசல்புரசலாக செய்திகள் வந்ததுண்டு. இருப்பினும் எதுவும் நிரூபிக்கப்படவில்லை.

குண்டுத்தாக்குதல் இடம்பெற்று ஏழு வருடங்களுக்கு இரண்டு மாதங்கள் இருக்கும் வேளையில் சுரேஸ் சாலேகைதாகி 90 நாட்கள் விசாரணைக்காக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இவர் மீது இன்னும் குற்றப்பத்திரிகை தாக்கலாகவில்லை. இப்போதைக்கு இவர் சந்தேக நபர் மட்டுமே. எவர் ஒருவரையும் விசாரணைக்காக அழைக்கவும் கைது செய்யவும் நீதிமன்ற உத்தரவு பெற்று தடுத்து வைத்திருக்கவும் சட்டத்தில் இடமுண்டு. பயங்கரவாத தடைச்சட்டம் இப்போதும் இருப்பதால் இவ்விடயங்களில் கால நீடிப்புக்கும் இடமுண்டு.

இதெல்லாம் நன்கறிந்த, இவ்விடயங்களில் நேரடி அனுபவமுள்ள முன்னாள் எம்.பிக்களும் முன்னாள் அமைச்சர்களுமான சிலர், சுரேஸ் சாலேக்காக குரல் கொடுப்பதாகக் காட்டிக்கொண்டு, வழமையான இனவாத விசத்தைகக்க ஆரம்பித்துள்ளனர்.

கோதபாயவின் தனிப்பட்ட வழக்கறிஞராக இருந்து அவரது ஜனாதிபதி காலத்தில் நீதி அமைச்சராக நியமனம் பெற்ற அலிசப்ரியே முதலில் குரல் கொடுத்தவர். தமது முன்னாள் எஜமான் கோதபாய கைது செய்யப்படலாம் என்ற அச்ச உணர்வு இவரது முதல் குரலுக்கு காரணமாக இருக்கலாம்.

அடுத்துக் குரல் கொடுத்தவர்கள் மூவர். முன்னாள் அமைச்சர்களான உதய கம்மன்பில, விமல் வீரவன்ச, சரத் வீரசேகர ஆகியோர். ராஜபக்சக்கள் குடும்பத்தோடு இரண்டறக் கலந்திருந்த முதல் இருவரும் ஏதோ காரணத்தால் கோதபாயவுடன் முரண்பட்டு அவரிடமிருந்து பிரிந்துசென்ற முக்கியமானவர்கள். கோதபாய துரத்தப்பட்ட போதும் தப்பியோடிய போதும் ஜனாதிபதி பதவியை துறந்தபோது அதனைப் பார்த்து ரசித்த இவர்கள் இப்போது சுரேஸ் சாலேக்காக குரல் கொடுப்பதற்கு வேறுகாரணங்கள் உண்டென்று விடயம் அறிந்தவர்கள் சொல்கிறார்கள்.

அடுத்தவர் சரத் வீரசேகர. முன்னாள் கடற்படை அதிகாரி. போர்க்காலத்தில் கடல் வலயப் பாதுகாப்பில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி விடுதலைப் புலிகளை அழிப்பதில் முன்னின்றவர். கோதபாயவின் ஆலோசனைக் குழுவான வியத்மகவில் முக்கியமாக விருந்தவர். இந்த மூவர்களோடு இன்னொரு முன்னாள் அமைச்சரான எஸ்.பி.திஸநாயக்கவும் இறுதியாக இணைந்துள்ளார். இவர் முன்வைத்துள்ள வாதம் சுரேஸ் சாலேயின் கைதினால் இலங்கையின் தேசிய பாதுகாப்பு வீழ்ச்சியடையும் அபாயம் இருக்கிறதென்பது. இந்தக் கைதினால் அநுர அரசை ஒரு சுனாமி சுற்றியடிக்கப் போகிறதென்றும் எச்சரித்துள்ளார்.

எஸ்.பி.திஸநாயக்க தவிர்ந்த மற்றைய மூவரும் எதற்கெடுத்தாலும் கூச்சல் போடுவதில் ஒத்த கருத்துடையவர்கள். நாமல் ராஜபக்ச சில நாட்களுக்கு முன்னர் பிரித்தானிய பல்கலைக்கழகங்கள் இரண்டில் உரை நிகழ்த்துவதற்கு அழைக்கப்பட்டவர். இப்பல்கலைக்கழகங்களின் தமிழ் மாணவர்களும் பிரித்தானியாவிலுள்ள தமிழர் அமைப்புகளும் ராஜபக்சக்களின் ஆட்சிக்கால படுகொலைகளையும் மனித உரிமை மீறல்களையும் வெளிநாட்டு விசாரணைப் பொறிமுறையை மறுத்ததையும் சுட்டிக்காட்டி நாமல் ராஜபக்சவின் உரையை நிறுத்தக் கோரினர். அவ்வாறே அவை நிறுத்தப்பட்டன. 2010ம் ஆண்டில் நாமலின் தந்தையான மகிந்தராஜபக்சவும் பிரித்தானியாவிலுள்ள பல்கலைக் கழகம் ஒன்றில் ஆற்றவிருந்த உரைதமிழ் மக்களின் கடுமையான எதிர்ப்பினால் ரத்துச் செய்யப்பட்டதை மறந்து விடமுடியாது.

நாமல் ராஜபக்சவின் உரை நிறுத்தப்பட்டதை விடுதலைப் புலிகளை ராஜபக்சக்கள் ஒழித்துக் கட்டியதன் எதிரொலி என உதயகம்மன்பில, விமல் வீரவன்ச, சரத் வீரசேகர ஆகியோர் உடனடியாக கருத்துத் தெரிவித்தனர். விடுதலைப் புலிகளை நிர்மூலமாக்கிய ராணுவத்தைக் காட்டிக் கொடுப்பதா என்றகேள்வியும் இவர்கள் கருத்தில் முதன்மை பெற்றது.

புலம்பெயர்ந்துள்ள தமிழ் சமூகத்தினரை மகிழ்ச்சிப்படுத்துவதற்காகவா இவ்வாறான தடைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற குற்றச்சாட்டும் இவர்களுடையது.

“ நாய் எங்கு காயப்பட்டாலும் தனது கால்களைத் தூக்கிக் கொண்டே ஊளையிடும். சில இனவாத அரசியல்வாதிகளுக்கு எந்த விடயமானாலும் அதில் விடுதலைப் புலிகளும் புலம்பெயர் தமிழர்களும் இருப்பதாகவே தெரியும். கனவிலும் மாற்றமுடியாத தீராவியாதி இது.

கடந்த பொதுத் தேர்தலின் போது தங்களின் சிங்கள மக்களாலேயே நிராகரிக்கப் பட்டு தோற்கடிக்கப்பட்ட இந்த இனவாதிகள், விடுதலைப் புலிகள் - புலம்பெயர் தமிழர் என்ற பெயர்களை எடுத்து சிங்களவர்களிடையேயுள்ள இனவாதிகளை உசுப்பேத்தி மீண்டும் இன அழிப்புகளை ஆரம்பித்து அதில் குளிர்காய முனைவது தெரிகிறது.

அநுரகுமர திஸ்ஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானது எனப் படம் காட்டி, புலிகளை ஆதரிக்கும் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் பக்கமே இன்றைய ஆட்சி செயற்படுகிறது எனவும் காட்டுவதற்கு படாதபாடுபடுகின்றனர்.

சுரேஸ் சாலேயின் கைது ராஜபக்சக்களை கொஞ்சம் ஆட்டம் காணவைத்துள்ளது என்பதை கொழும்பிலிருந்து வரும் ஊடகங்களின் ஊடாக அறிய முடிகிறது. இவ்விடயம் தொடர்பாக இதுவரை எந்தவொரு அறிக்கையையும் ராஜபக்சக்களோ அல்லது அவர்களின் பொதுஜன பெரமுனவோ தெரிவிக்கவில்லை. உதயகம்மன்பில, விமல் வீரவன்ச, சரத் வீரசேகர ஆகியோரின் உளறல்களால் தங்களுக்கு மேலும் நெருக்கடிகள் ஏற்படலாமோ என்ற அச்சம் ராஜபக்சக்களிடம் காணப்படுகிறது.

கடந்த பொதுத்தேர்தலில் தோல்வியடைந்ததை அடுத்து தாம் அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதாக அப்போது அறிவித்த முன்னாள் அமைச்சர் அலி சப்ரி, எதற்காக சுரேஸ் சாலேகைது செய்யப்பட்ட விடயத்தில் அவசரப்பட்டு கருத்துக் கூறினார் என்ற கேள்வியும் பெரமுனகாரரிடம் எழுந்துள்ளது.

ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் தரப்பிலிருந்து வந்திருக்கும் கோரிக்கை நியாயமானது. இது தொடர்பாக தற்போது முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு எவரும் முட்டுக்கட்டை போடவோ இடையூறு விளைவிக்கவோ வேண்டாமென்று கத்தோலிக்க திருச்சபை வேண்டு கோள் விடுத்துள்ளது. (கத்தோ லிக்க திருச்சபை இங்கு சுட்டிக் காட்டுவது அந்த மூவரை நோக் கியே என்பதை பெயர் குறிப் பிட்டுச் சொல்லவேண்டிய தில்லை).

ஈஸ்டர் தாக்குதல் திட்டமிட்ட மனிதப் படுகொலை எனப் பார்க்கும் கத்தோலிக்க திருச்சபை, சுரேஸ் சாலே கைது தொடர்பாக தேவையற்ற வியாக்கியானங்களை நிராகரிக்கிறது. இதனுடைய உண்மை கண்டறியப்பட வேண்டுமெனவும் கோருகிறது.

ஆரம்பிக்கப்பட்டிருக்கும் விசாரணையை குழப்ப முயற்சிப்பதானது இத் தாக்குதலில் உயிரிழந்த மற்றும் அங்கவீனமுற்ற பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் பாரிய அநீதியாகும். மக்கள் அனைவரும் பொறுமையுடன் காத்திருந்து உண்மைகள் வெளிவர ஒத்துழைக்க வேண்டும். குற்றப் புலனாய்வுத் திணைக்களம் முன்னெடுக்கும் சுதந்திரமான விசாரணை இது. எனவே இதனைஅரசியல் மயமாக்காமல் விசாரணைகள் அதன் போக்கில் முன்னெடுக்க இடமளிக்கவேண்டும். மக்கள் அனைவரும் பொறுமையுடன் காத்திருந்து உண்மைகள் வெளிவர ஒத்துழைக்க வேண்டுமென்று திருச்சபையின் வேண்டுகோள் சுட்டிக்காட்டியுள்ளது.

உண்மையைக் கண்டறியவும் நீதியான விசாரணைக்கும் ஏழாண்டுகள் காத்திருந்த பாதிப்புக்குள்ளான கத்தோலிக்க சமூகம் சுயாதீனமான குற்றப் புலனாய்வுத் துறையினரின் விசாரணையில் நம்பிக்கை வைத்திருப்பதை இந்த அறிக்கையினூடாக கண்டறிய முடிகிறது.


உண்மை கண்டுபிடிக்கப்படாதிருக்க வேண்டுமென்ற நோக்குடன் குறுகிய அரசியல் பார்வையிலும் இனவாத நோக்கிலும் தம்மிஸ்டப்படி அறிக்கைவிடும் அரசியல்வாதிகள் கத்தோலிக்க திருச்சபையின் வேண்டுகோளை ஏற்று புலனாய்வுத்துறை விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டியது அவசியம்.

இதனைப் புரிந்துகொள்ளாது எதற்கெடுத்தாலும் எடுத்தஎடுப்பில் விடுதலைப் புலிகளையும் புலம்பெயர் தமிழ் மக்களையும் இனவாதத்துக்குள் வம்புக்கிழுப்பவர்களைப் பற்றி என்ன சொல்லலாம்.

நாய்க்கு எங்கு காயம் ஏற்பட்டாலும் அது கால்களைத் தூக்கிக் கொண்டே ஊளையிடும். இனவாத அரசியலையே கனவிலும் கொள்ளும் சிலர், புலிகள் -புலம்பெயர் தமிழர் என்று கூச்சலிட்டுக் கொண்டேயிருப்பார்கள். இது அவர்களுக்குதீராவியாதி. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவ்வாறானதொரு அரசியல் ஆய்வுமுறைமை நமக்கு தேவையானது?



யதீந்திரா

இன்று தமிழ்ச் சூழலில் இடம்பெறும் அரசியல் உரையாடல்களை நோக்கினால் அரசியல்வாதிகள் தொடர்பில் கோபப்பட ஒன்றுமில்லை- ஏனெனில் அவர்கள் தேர்தல் நலனை அடிப்படையாகக் கொண்டு செயல்படுபவர்கள். தாங்கள் இருக்கின்றோம் என்பதை காண்பிப்பதற்காக எதையாவது செய்துகொண்டுதான் இருக்கவேண்டும். இப்போது பிரச்சினை அரசியல்வாதிகள் அல்ல- அரசியல் ஆய்வாளர்கள் தான். அவர்கள் பற்றித்தான் இப்போது நாம் கவலைப்பட வேண்டியிருக்கின்றது. ஜிட்டு கிஸ்ணமூர்த்தி கூறியதுபோன்று இப்போது பிரச்சினை மாணவர்கள் அல்லர் ஆசிரியர்கள் தான். நமது ஆய்வாளர்கள் தொடர்பில் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, அண்மையில் ஒரு ராஜதந்திரி பத்திரிகை ஆரிசியர்களை சந்தித்தபோது, ஒருவரிடம் கூறியவிடயம் தான் நினைவுக்கு வந்தது. அதாவது, "நான் இதுவரையில் தமிழ் அரசியல்வாதிகள் தான் விளங்காமல் பேசிக் கொண்டிருக்கின்றனர் என்று எண்ணினேன், இப்போதுதான் புரிகிறது பிரச்சினை அங்கில்லை, இங்குதான் இருக்கின்றது, அரசியல்வாதிகளுக்கு புத்தி புகட்டவேண்டிய பத்திரிகையாளர்களே இப்படியிருந்தால் அரசியல்வாதிகளை எப்படித் திருத்தமுடியும்?".

போருக்கு பின்னர் இடம் பெற்ற விடயங்களை சற்று நினைவுபடுத்திப் பார்த்தால் நாங்கள் எவ்வாறான ஆய்வு முறைமொன்றை தொடர்கின்றோம் என்பது புரியும். அரசியல்வாதிகளின் தீர்மானங்களுக்கு எதிர்வினையாற்றுவதே ஆய்வாளர்கள் மற்றும் புத்திஜீவிகள் என்போரின் பணியாக இருக்கிறது. இதற்குள் தான் நானும் இருந்தேன். நான் என்னை விலக்கிவைத்து விவாதிக்கவில்லை. எனது தவறுகளை ஏற்றுக் கொள்ளும் துணிவு எனக்குண்டு. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சில தீர்மானங்களை எடுத்தது. ஊடகத் தளத்தில் ஆய்வாளர்கள் அதன் சரிபிழைகளை ஆராய்தனர். அன்றிருந்த சூழலில், நான் உட்பட பெரும்பாலான ஆய்வாளர்கள் என்போர், கூட்டமைப்பின் நிலைப்பாடுகளுக்கு எதிராகவே எழுதினர். ஒரு கட்டத்தில் கூட்டமைப்பிற்கு மாற்றான தலைமையொன்றை ஏற்படுத்த வேண்டும் என்னும் நிலைப்பாடு கருத்துருவாக்கமாக முன்வைக்கப்பட்டது. அதில் நாங்களும் ஈடுபட்டோம். இப்போது திரும்பிப் பார்த்தால் அவ்வாறான விடயங்களில் நாங்கள் ஈடுபட்டிருக்கக் கூடாது என்பதை புரிந்துகொள்ள முடிகிறது.

இதன் பின்னர் சிலவிடயங்கள் நடைபெற்றன. தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எழுகதமிழ் இடம்பெற்றது. முதலில் வடக்கில் பின்னர் கிழக்கில். இதுதான் சரியான தமிழ்த் தேசியம் என்றவாறு ஆய்வுகள் குவிந்தன. விக்கினேஸ்வரன் தலைமையில் ஒரு புதிய கட்சியை உருவாக்கிவிட்டு, பேரவை காணாமல் போனது. மேலும் தமிழர் அரசியல் உடைந்தது. இந்தக் காலத்தில் தமிழ் மக்கள் பேரவையின் சார்பில் ஒரு தீர்வு ஆலோசனையும் முன்வைக்கப்பட்டது. இப்போதும் சிலர் அதனை உச்சரித்துக் கொண்டிருக்கின்றனர். இதன் பின்னர் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை என்னும் பெயரில் ஐந்து நாள் நடைபவணி இம்பெற்றது. அதனைத் தொடர்ந்து,



தர்க்கத்திற்கும் யதார்த்தத்திற்கும் முன்னுரிமையளிக்கும் இளைய தலைமுறையொன்று வெளியில் வந்துவிடக் கூடாது என்னும் நோக்கத்தின் அடிப்படையிலேயே அனைத்தும் நடக்கின்றன. அரசியல் ஆய்வாளர்கள், புத்திஜீவிகள் எப்போர் அரசியல் போலித்தனங்களுக்கும் புலம்பெயர் திணிப்புக்களுக்கும் சேவகம் செய்பவர்களாக இருப்பது புலமைக்கு அழகல்ல அவர்கள் உண்மையிலேயே புலமை நேர்மையுள்ளவர்களாக இருப்பின்.

அதனை முன்னெடுத்தது யார், அரசியல்வாதிகளாக அல்லது சிவில் சமூகமா என்னும் பட்டிமன்றம் இடம்பெற்றது. இதற்கு பின்னர், தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முயற்சி பல இழுபறிகளுக்கு பின்னர் வெற்றி பெற்றது ஆனால் அதனைஅடிப்படையாகக் கொண்டு அடுத்தகட்டத்திற்கு செல்லும் முயற்சி வெற்றிகரமாக குழப்பப்பட்டது. உண்மையில் தமிழ் பொதுவேட்பாளருக்கான ஆதரவைத் தொடர்ந்து தமிழ் கட்சிகள் மேலும் தங்களுக்குள் உடைந்தன. பொதுவேட்பாளருக்காக ஒன்றுபட்டவர்கள் மூன்று அணிகளாக தேர்தலில் போட்டியிட்டனர். உண்மையில் அரசியல் கட்சிகள் பொதுவேட்பாளர் விடயத்தில் ஒன்றுபட்டதே, அடுத்த தேர்தலில் அனைவருமாக போட்டியிட வேண்டும் என்னும் நிபந்தனையின் அடிப்படையில்தான். ஆனால் பின்னர் அந்த இலக்குசிவில் சமூகமென்று தங்களை அடையாளப்படுத்திக் கொண்ட நபர்களால் திட்டமிட்டு குழப்பப்பட்டது. இதற்கிடைப்பட்ட காலத்தில் அவ்வப்போது ஒன்றுபட்டும் பிரிந்தும் பின்னர் ஒன்றுபட்டும் சிலகடிதங்கள் ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அரசியல்வாதிகளுடன் போட்டிபோடும் நோக்கில் வடக்கு கிழக்கிலுள்ள சில மதகுருக்கள் சிவில் சமூகக் குழுக்கள் என்போரை இணைத்துக் கொண்டும் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

இவைகளின் விளைவுகள் தொடர்பில் ஆராயாமல் மீண்டும் இப்போது புதிதாகப் பேசுவதுபோன்று திம்புக் கோட்பாடுகள் பற்றியும், புதிய பிரகடனங்கள் தொடர்பிலும் பேசுவது சரியானதா? நேர்மையானதா? இந்த இடத்தில்தான் தமிழ் அரசியல் ஆய்வுத் துறையின் அவலம் தொடர்பில் கேள்வி எழுப்பவேண்டியிருக்கின்றது.

வெறுமனே எதிர்வினையாற்றிக் கொண்டிருப்பதுதான் ஆய்வுகளின் நோக்கமா அல்லது, இதுவரையில் இடம்பெற்ற நிகழ்வுகள் அனைத்தும் ஏன் விழலுக்கிறைத்த நீரானது என்பதை ஆராய்ந்து, அதற்கேற்ப பொறுப்புணர்வு மிக்க ஆய்வுகளை முன்வைப்பது ஆய்வுகளின் நோக்கமாக இருக்கவேண்டுமா? இன்று தமிழ்ச் சூழலில் இடம்பெறும் ஆய்வுகள் என்னும் பெயரிலான எழுத்துக்களை அவதானிக்கும் போது, அவ்வாறான நோக்கத்துக்கு நெருக்கமான எழுத்துக்களை காண்பது அரிதாகவே இருக்கின்றது. அண்மையில் அரசியல் ஆய்வாளர் ஒருவர் பேசுகின்றார் - தமிழ் மக்கள் நிம்மதியாக இல்லாவிட்டால் இங்கு எவரும் நிம்மதியாக இருக்கமுடியாது என்று. இப்படி பிரபாகரன் கூட பேசியதில்லை. கீழே இருப்பவர்கள் கைதட்டவேண்டும், சில அரசியல்வாதிகள் நம்மை மேடையில் ஏற்றவேண்டும் என்பதற்காக எழுதுவதும் பேசுவதும் ஆய்வாளர்களின் பணியல்ல. அதுகட்சித் தொண்டர்களின் பணி.

போருக்கு பின்னரான கடந்த பதினாறு ஆண்டுகளில் இடம்பெற்ற எந்தவொரு செயல்பாடும் - ஏன் எந்தவொரு சாதகமானஅரசியல் விளைவுகளையும் ஏற்படுத்தவில்லை? எழுக தமிழின் சாதகமான விளைவு என்ன? பொத்துவில் தொடக்கம் பொலிகண்டியின் சாதகமான விளைவு என்ன? பொதுவேட்பாளரின் சாதகமான விளைவு என்ன? அனுப்பபட்ட கடிதங்களின் சாதகமான விளைவு என்ன? இந்தப் பின்னணியில் இருந்தல்லவா இன்றைய செயல்பாடுகளை மதிப்பிடவேண்டும். இவ்வாறான செயல்பாடுகள் எந்தவொரு விளைவுகளையும் ஏற்படுத்தாதபோது, இப்போது முன்னெடுக்கப்படும் அதேபோன்ற செயல்பாடுகள் எவ்வாறு சாதகமான விளைவுகளை தரமுடியும்? திம்புக் கோட்பாடுபற்றி ஒரு அரசியல் கட்சிபேசலாம் - அது அவர்களை வெளிப்படுத்துவதற்கான ஒரு உத்தி - ஆனால் அதனை ஆய்வாளர்கள் வாய் முடிக் கேட்டுக் கொண்டிருப்பது சரியா? திம்புக் கோட்பாடுகள் எப்படியான அரசியல் சூழலில் முன்வைக்கப்பட்டது? இப்போது ஈழத் தமிழர் அரசியல் எந்த நிலையில் இருக்கின்றது? ஒருபுறம் இந்தியாவின் நேரடியான தலையீடு, மறுபுறம் இந்தியாவின் மறைமுகமான தலையீடான அவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட ஆயுத இயக்கங்கள் - இவ்வாறானதொரு நிலையில் அல்லவா திம்பு பேச்சுவார்த்தை இந்தியாவின் ஏற்பாட்டில் இடம்பெற்றது- அப்போது நடைபெற்றவிடயத்தின் அடிப்படையில் இப்போது பேசுவது என்றால் எப்படிப் பேசுவது? இந்தக் கேள்விகளையல்லவா ஆய்வாளர்கள் என்போர் கேட்கவேண்டும்.

போருக்கு பின்னரான அரசியல் சூழலில் தென்னிலங்கையை இறங்கிவரச் செய்யும் அரசியல் அணுகுமுறைகள் எவையுமே வெற்றிபெறவில்லை என்பதிலிருந்து ஒருவிடயம் வெள்ளிடைமலை. அவர்கள் இறங்கிவரப் போவதில்லை. இந்த இடத்தில் எவ்வாறு யதார்த்தபூர்வமாகவும் இருப்பதிலிருந்து முன்னோக்கி செல்லவேண்டும், என்பதிலிருந்தல்லவா சிந்திக்கவேண்டும். அடிப்படையில் அரசியலை பொறுப்புணர்வுடனும் மனச்சாட்சியுடனும் அணுகும் அரசியல் ஆய்வுமுறையொன்றே தமிழ்ச் சூழலுக்குத் தேவையானது. இதனை நான் பொறுப்புணர்வு மிக்க அரசியல் ஆய்வுமுறைஎன்பேன். இதுஎந்தவொருகருத்தியல் சார்ந்ததும் அல்ல கடந்தகால கற்பிதங்கள் தொடர்பானதும் அல்ல- மாறாக, இன்றுள்ள அரசியல் நிலைமையை புரிந்து கொண்டு, ஏழைத் தமிழ் மக்களின் வாழ்நிலையை கருத்தில் கொண்டு, நமது அரசியலை நோக்கும் முறையாகும். இதுவே பொறுப்புணர்வு மிக்கஅரசியல் ஆய்வாகும். வெளிநாடுகளில் இருந்து தங்களின் பணச் செருக்கினால், தாங்கள் எண்ணியவாறு எதனையும் வடக்கு கிழக்கில் திணிக்கலாம் என்று எண்ணுபவர்களின் தீயநோக்கங்களுக்கு துணைபோகாத புலமைத் தலையீடுகளே இன்று தேவை.

கட்சி, நிலைப்பாடுகள், தமிழ் தேசிய(சொல்) மயக்கங்களை விடுத்து, யதார்த்தநோக்கில் விடயங்களை முன்வைப்பதும் அது பற்றிய உரையாடல்களை முன்கொண்டு செல்லுவதும் தான் நமது ஆய்வின் அடிப்படையாக இருக்க வேண்டும். இளைஞர்களை அவ்வாறான திசையில் சிந்திக்க தூண்டவேண்டும். தர்க்கத்திற்கும் யதார்த்தத்திற்கும் முன்னுரிமையளிக்கும் இளைய தலைமுறையொன்றுவெளியில் வந்துவிடக் கூடாது என்னும் நோக்கத்தின் அடிப்படையிலேயே அனைத்தும் நடக்கின்றன. அரசியல் ஆய்வாளர்கள், புத்திஜீவிகள் எப்போர் அரசியல் போலித்தனங்களுக்கும் புலம்பெயர் திணிப்புக்களுக்கும் சேவகம் செய்பவர்களாக இருப்பது புலமைக்கு அழகல்ல அவர்கள் உண்மையிலேயே புலமை நேர்மையுள்ளவர்களாக இருப்பின்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிஸ்க் எடு கொண்டாடு



நிலாந்தன்

கடந்த வாரம் யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. வழமையாக சமூகவலைத் தளங்களில் பட்டம் பெற்றவர்களின் கொண்டாட்டப் படங்கள் பகிரப்படும். ஆனால் இம்முறை வேலையற்ற பட்டதாரிகளை முன்வைத்து ஒரு விவாதப் பரப்பு திறக்கப்பட்டது.

பல்கலைக்கழகங்கள் ஆண்டு தோறும் பட்டதாரிகளை உருவாக்குகின்றன. ஆனால் நாட்டில் இப்பொழுது **42000**க்கும் குறையாத வேலையற்றபட்டதாரிகள் உண்டு. நாட்டில் வேலையில்லாத **365,951** தனிநபர்களில், பட்டதாரிகள் அல்லது அதையொத்த கல்வித் தகமையுடையவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட **42,254** என்று பிரதமர் ஹரிணி கடந்த நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் கூறினார்.

அவர்களை வேலையற்றபட்டதாரிகள் என்று அழைப்பதை விடவும் அரச வேலைக்காககாத்திருக்கும் பட்டதாரிகள் என்று அழைப்பது நல்லது என்று எனது நண்பர் ஒருவர் கூறுவார். கடந்தவாரம் சமூகவலைத்தளங்களில் நிகழ்ந்த வாதப் பிரதிவாதங்களும் அந்தவகைப்பட்டவைதான். பட்டதாரிகள் பட்டம் பெற்ற பின் வேலை இன்றிதெருவில் நிற்கப் போகிறார்கள் அல்லது அரச வேலை கேட்டு ஆர்ப்பாட்டம் செய்யப் போகிறார்கள் என்ற பொருளில் வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. இத்தகைய தோர் பின்னணியில், புதியதொகுதி பட்டதாரிகள் வெளியேறுவதுஎன்பது வெளியேற்றப் பட்டதாரிகளின் எண்ணிக்கையில் ஒரு புதியதொகுதி இணைவதைக் குறிக்கும் என்றும் அங்குவிமர்சிக்கப்பட்டது.

பல்கலைக்கழக அனுமதிகிடைக்கும் பொழுதுவாழ்வின் முக்கிய பேறுஒன்றை அடைந்துவிட்டதாக ஒவ்வொரு பிள்ளையும் பெருமைப்படுகிறது.அது உண்மைதான். பொன்னிறக் கனவுகளோடு அவர்கள் பல்கலைக்கழகத்துக்குள் வருகிறார்கள். பட்டம் கிடைத்ததும் அவர்கள் அதைக் கொண்டாடும் விதத்தில், எடுக்கும் ஒளிப்படங்களில் அதை அவர்கள் எந்தளவு பெருமைக்குரியதாகக் கொண்டாடுகிறார்கள் என்பது தெரியும்.ஆனால் பட்டம் எடுத்த பின் வேலை தேடி அலையும் போதுதான் அவர்களுடைய பொன்நிறக் கனவுகள் நிறமிழக்கத் தொடங்குகின்றன.

ஆனால் அதற்கு அவர்கள் மட்டும் பொறுப்பல்ல. பின்வரும் அடிப்படைக் காரணங்கள் உண்டு.

முதலாவது, சந்தைப் பெறுமதிமிக்க, தொழில் வாய்ப்புகள் அதிகமுடைய பட்டதாரிகளை உருவாக்கும் விதத்தில் கல்விக் கொள்கை திட்டமிடப்படாமை.

இரண்டாவது,புதியதொழில் வாய்ப்புகளை உருவாக்குவதில் தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்கள் தோல்வியடைந்தமை.

மூன்றாவது,தொழில் தொடர்பாக சமூகத்திடம் இருக்கும் அளவுகோல்கள், பிரமைகள்.

நான்காவது,தொழில் முனைவோரை உருவாக்காத கல்விமுறை. இதைவேறு வார்த்தைகளில் சொன்னால் அரசுஅலுவலர்களைஅதிகமாகஉற்பத்திசெய்யும் கல்வி. அதாவது ரிஸ்க் எடுக்கக் கற்றுக் கொடுக்காத கல்வி.

எனவே பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பதற்கு தனிய அவர்கள் மட்டும் பொறுப்பல்ல. மேற்சொன்ன காரணங்களும் பொறுப்பு அது ஒரு கூட்டுத் தோல்வி.

பட்டதாரிகளில் பெரும் பகுதியினர் ஏன் அரச வேலையை நாடுகிறார்கள்? அதற்குப் பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன.

முதலாவதாக அங்கே கஷ்டப்பட்டு வேலை செய்யத் தேவையில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு. சும்மா இருந்து சம்பளம் எடுக்கலாம், தடைதாண்டிப் பரீட்சைகளில் சித்திபெறுவதன் மூலம் பதவி உயர்வுகளையும் சம்பள உயர்வுகளையும் பெறலாம் என்று பட்டதாரிகள் நம்புகிறார்கள் என்ற குற்றச்சாட்டு.

இரண்டாவது காரணம், ஓய்வூதியம் கிடைக்கும். எனவே முதியவயதில் பாதுகாப்புஉண்டு.

மூன்றாவது காரணம்,அரசாங்கம் என்றால் பலமானது. மக்களைப் பாதுகாப்பது. அதிகாரம் மிக்கது என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அரச ஊழியராக இருப்பது அதாவது அரச அதிகாரத்தை சமூகத்தில் அமுல்படுத்துவோராக இருப்பது கௌரவமானது, உயர்வானது என்ற சமூக நம்பிக்கை.

நான்காவது காரணம், அரசாங்கத்தை மட்டுமல்ல யாரையும் பார்த்துக் கொண்டிருக்காமல், யாரிடமும் கையேந்தாமல் தன் திறமைகளை நம்பி,தான் கற்றவைகளை அடிப்படையாக வைத்து தொழில் முனைவோராக மேல் எழத் தேவையான துணிச்சலும் வைராக்கியமும் இல்லாமல் இருப்பது.

இந்த நான்கு காரணங்களிலும் முக்கியமானது நாலாவது. பட்டதாரிகள் ஏன் தொழில் முனைவோராக மேலெழ முடியவில்லை? அல்லது மேலெழ விரும்பவில்லை? இந்தக் கேள்விக்குப் பதில், கல்விமுறையின் தோல்விக்குள் இருக்கிறது. நமது கல்வி முறைமை தொழில் முனைவோருக்குத் தேவையான துணிச்சலையும் படைப்புத் திறனையும் தெரிவுகளையும் பட்டதாரிகளுக்கு வழங்கத் தவறிவிட்டதா?

அரச ஊழியத்துக்குள் கிடைக்கும் பாதுகாப்பு, அரசு ஊழியர் என்பதால் கிடைக்கும் மரியாதை இவை இரண்டையும் தவிர ஒருதொழில் முனைவோர் அல்லது புதிதாகச் சிந்திக்கும் ஒரு பட்டதாரி அதிகம் சம்பாதிக்கலாம், அதிகம் சாதிக்கலாம், அதிகம் பிரபல்யமாகலாம் என்பதற்கு நமது சமூகத்துக்குள்ளேயே உதாரணங்கள் உண்டு.

ஆனால் பட்டங்கள் தொடர்பாகவும் தொழில் தெரிவுகள் பொறுத்தும் தமிழ்ச் சமூகத்தில் காணப்படும் இறுகிக் கட்டிபத்திய சிந்தனைகளை உடைத்துக் கொண்டு வெளிவர பெரும்பாலான பட்டதாரிகள் தயாராக இல்லை. ஒரே வசனத்தில் சொன்னால் ரிஸ்க் எடுக்கத் தயாரில்லை.

ஒருகாலம் யுத்தகளத்தில் அதி உச்ச ரிஸ்க் எடுத்த ஒரு சமூகம். அதைவிட முக்கியமாக அவ்வாறு ரிஸ்க் எடுக்கலாம் என்ற முன்னுதாரணத்தை காட்டிய பெரும்பாலானவர்கள் முறைசார் கல்விக்கூடாக வந்தவர்கள் அல்ல. ஆயுதப் போராட்டம் தமிழ் சமூகத்தில் பலவெடிப்புகளை ஏற்படுத்தியது. சமூகத்தின் பாரம்பரியக் கல்வி தொடர்பான நம்பிக்கைகளை அது தகர்த்தெறிந்தது. கல்வித் தகமைக்கும் துணிச்சலுக்கும், கல்வித் தகமைக்கும் சாதனைகளுக்கும் இடையேகண்டிப்பாகத் தொடர்பு இருக்கத் தேவையில்லை என்பதையும் அது நிரூபித்தது. பட்டப் படிப்புக்களை அடிப்படைத் தகைமைகளாகப் போற்றாத விடுதலை இயக்கங்கள் சமூகத்தின் தலைவிதியைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டன. சமூகத்தின் மூன்றில் ஒரு பகுதியை புலம்பெயரவைத்தன. உலகமேவியக்கும் தியாகங்களையும் வீரத்தையும் நிரூபித்தஒருபோராட்டம் அது.

ஆயுதப் போராட்டத்தின் தொடக்கத்தில் "சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது", "கல்வித்தகுமையற்ற போராளிகள் வெற்றி பெறமாட்டார்கள்" என்றெல்லாம் விவாதிக்கப்பட்டது. ஆனால் கடந்த நான்கு நூற்றாண்டு காலப் பகுதிக்குள் அரசற்ற தமிழ் மக்கள் மத்தியில் கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்கள் நிலைத்திருந்த கருநிலை அரசானது மேற்படி நம்பிக்கைகளை விவாதத்துக்கு உள்ளாக்கியது. எனினும் ஆயுதப் போராட்டத்தின் தோல்விக்கு பின் மீண்டும் படிப்பு, செல்வம், செல்வாக்கு போன்றவை தலைமையைத் தீர்மானிக்கும் அளவுகோல்களாக மேலெழுந்தன. அதிகம் பட்டப் படிப்புகள் இல்லாதவர்கள் நடத்திய போராட்டம் தோல்வியடைந்தது என்று கூறுவோர் இப்பொழுது உண்டு.

ஆனால் அவர்கள் வசதியாக மறந்துவிடும் ஒரு விடயம் என்னவென்றால், ஆயுதப் போராட்டத்திற்கு முன்னரும் பின்னருமான அப்புக்காத்துக்களின் அரசியல் தமிழ் மக்களைமட்டு மல்ல, அவர்களுடைய கட்சிகளையே எங்கே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது? என்பதுதான். ஆங்கிலம் தெரிந்த, சிங்களம் தெரிந்த, கற்றறிந்ததமிழ்த் தலைவர்களும் இறுதி வெற்றியைப் பெறவில்லை.அவர்களைமீறி எழுந்த ஆயுதப் போராட்டமும் இறுதி வெற்றியைப் பெறவில்லை.

இப்படிப்பட்டதோர் அரசியல், பொருளாதார, சமூகஉளவியல் பின்னணிக்குள், கடந்த 16ஆண்டுகளையும் தொகுத்துப் பார்த்தால் தமிழ் மக்களின் சுதந்திரத்துக்கான போராட்டத்தில் இருந்து அடுத்து வந்த தலைமுறை கற்றுக் கொண்டவை எவை? என்று கேள்வி வலிமையாகமேல் எழுகிறது. ஆயுதப் போராட்டம் கற்றுக்கொடுத்த துணிச்சல், தியாக முன்னுதாரணம், ரிஸ்க் எடுக்கும் மனோநிலை போன்றவற்றில் இருந்து பட்டதாரிகள் எந்தளவுக்குக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்?

அவர்கள் உயிரைக் கொடுக்கவேண்டாம். பெரிய அளவில் அர்ப்பணிக்கவும் வேண்டாம். தொழில் ரீதியாக ரிஸ்க் எடுத்தாலே, துணிகரதொழில் முயற்சிகளில் இறங்கினாலே போதும்.செல்வந்தர்களாகலாம். புதிய முன்னுதாரணங்கள் ஆகலாம். ஆனால் ஏன் தங்களுடைய சௌகரிய வலையங்களை விட்டுவெளியே வரப் பயப்படுகிறார்கள்?

"துறைமுகத்தில் நங்கூரமிட்டு நிற்பது கப்பலுக்குப் பாதுகாப்பானது. ஆனால் கப்பல் அதற்காகக் கட்டப்படுவதில்லை" என்று ஆங்கில மேற்கோள் ஒன்று உண்டு. அது போலவே "அமைதியான கடல் சிறந்த படகோட்டிகளை உருவாக்குவதில்லை" என்றும் ஆங்கிலம் மேற்கோள் ஒன்று உண்டு. இந்த இரண்டு மேற்கோள்களில் இருந்தும் கற்றுக் கொண்டால் பட்டதாரிகளுக்கு அவர்களுடைய பட்டங்களே சிறைகளாக மாறாது.




**புதிதாக வெளியேறும் பட்டதாரிகள், அவர்கள் உயிரைக் கொடுக்கவேண்டாம். பெரிய அளவில் அர்பணிக்கவும் வேண்டாம். தொழில் ரீதியாக ரிஸ்க் எடுத்தாலே, துணிகரதொழில் முயற்சிகளில் இறங்கினாலேபோதும்.செல்வந்தர்களாகலாம். புதிய முன்னுதாரணங்கள் ஆகலாம். ஆனால் ஏன் தங்களுடைய சௌகரிய வலையங்களை விட்டுவெளியே வரப் பயப்படுகிறார்கள்?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர் நல்லக் கண்ணு:

## இந்திய பொது உடைமை இயக்கத்தின் பெருமிதம்!

- சுகு சிறிதரன்



இந்திய வாழ்வியலின் உட் சரடாக ஒரு ஆன்மா செயற்பட்டு கொண்டிருக்கிறது அதற்கு வரலாற்றுத் தொடர்ச்சி இருக்கிறது.

பல இன மத மொழி சாதி பால் வர்க்கம் பூர்வ குடி மக்கள் என அந்த 140 மில்லியன் மக்களின் பிரமாண்டமான பன்முகத்தன்மையை உலகில் வேறு எங்கும் காண முடியாது.

இத்தகைய பெரும் மக்கள் திரள் கொண்ட மாபெரும் தேசத்திலேயே சமூக நீதியும் சமூக அறமும் சகவாழ்வும் நிலைநிறுத்தப்படுவதற்கான பேரியக்கங்கள் வரலாற்றின் நியதியாக எழுந்தன.

சகோதரத்துவத்தையும் சம நீதியையும் வலியுறுத்திய பல உன்னதமான மனிதர்கள் கடந்த இந்த நூற்றாண்டில் வாழ்ந்தார்கள்.

அரசியல் சமூகம் பொருளாதாரம் இலக்கியத் தளத்தில் அவ்வாறான மனிதர்கள் ஒளி வீசினார்கள்.

இன்றளவில் உலகளாவிய அளவில் அறப்போராட்டத்தின் குறியீடான காந்நியடிகள், இந்திய சமூக நீதி பேரியக்கத்தின் மனசாட்சியாக அம்பேத்கார், நவ இந்தியாவின் சிற்பி ஜவஹர்லால் நேரு, பால் சமத்துவத்தை தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தை 1800 களின் நடுப்பகுதியில் முன்னெடுத்துச் சென்ற சாவித்திரி பூலே, தோழர் ஜீவானந்தம் தந்தை பெரியார் காமராஜர் அன்னை தெரசா போன்று மனிதர்கள் வரிசையில் ஒரு நூற்றாண்டு கடந்து வாழ்ந்து 85 ஆண்டுகள் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என தமிழகத்தின் மேல அகலங்களில் இந்திய சுதந்திரத்திற்காகவும் வர்க்க ஏற்றத்தாழ்வற்ற சமுக கனவை மெய்ப்பிப்பதற்காகவும் இயங்கியவர் தோழர் நல்லக்கண்ணு.

சமூக நீதிக்காக தமிழக பட்டி தொட்டி எங்கும் நடந்த போராட்டங்கள், இயற்கை வளங்கள் சூறையாடப் படுவதற்கு எதிரான போராட்டங்கள், இயற்கை வளங்களை நீர்நிலைகளை பாதுகாப்பதற்கான போராட்டங்கள், ஆலைத் தொழிலாளர்களின் போராட்டங்கள், விவசாயிகளின் இயக்கங்கள், பெண்கள் உரிமைக்கான இயக்கங்கள், எதேச்சதிகார சட்டங்களுக்கு எதிரான போராட்டங்கள், ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆக்கிரமிப்புகளுக்கு எதிரான போராட்டங்கள், இலங்கையில் தமிழர்கள் மீதான தேசிய ஒடுக்கு முறைக்கு எதிரான ஒருமைப்பாட்டு இயக்கங்கள் இவை எல்லாவற்றிலும் தோழர் நல்லக்கண்ணு இல்லாத போராட்டங்கள் அரிதிலும் அரிது.

15 வயதில் இந்திய சுதந்திர இயக்கத்தால் காந்தியால் ஆகர்ஷிக்கப்பட்ட தோழர் நல்லகண்ணு, பின்னர் வரலாற்று சிறப்புமிக்க இவ்வருடம் நூற்றாண்டு கண்ட இந்திய பொதுவுடமை இயக்கத்தில் தன்னை சங்கமம் ஆக்கிக் கொண்டார்.

1940களில் இறுதிப்பகுதியில் கம்யூனிஸ்ட் இயக்கம் தலைமறைவாக இயங்கிய காலத்தில் (தெலுங்கானா எழுச்சி காலம்) ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக விசாரணை கைதியாக சிறை சித்திரவதைகளை அனுபவித்தார். 18 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது

சில தோழர்கள் கேட்பார்கள். காமராஜர் போல பெரியார் போல இப்போதெல்லாம் தலைவர்கள் அரிதாகப் போனதேன்? என்று. ஆனால் வரலாறு அத்தகைய உன்னதமான மனிதர்களை இனங்காட்டிக் கொண்டுதான் இருக்கிறது.

தோழர் நல்லக்கண்ணு அசாதாரணை எளிமை கொண்ட தோழர். ஓய்வு ஒழிச்சல் இல்லாத போராட்டம் மக்கள் பணி என்று வாழ்ந்தவர்.

அவர் தியாகராஜ நகரில் செவாலியர் சிவாஜி வீதியில் அமைந்துள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் காரியாலயமான பாலன் இல்லத்தில் தோழில் துண்டுடன் தமிழகத்தின் சராசரி விவசாயி போல் அமர்ந்திருப்பார். அந்தத் தோற்றமே அவர் எம்மவர் என்ற உணர்வை ஏற்படுத்தி விடும்.

வார்த்தைகளில் போலி அலங்காரங்கள் எதுவும் இல்லை. எப்போதும் மலர்ந்த முகத்துடன் மிக எளிமையான உரையாடல் பிரமுக அரசியல் தனங்கள் எதுவும் கிடையாது.

விவசாயிகள் மாநாடொன்றில் கலந்து விட்டு உடுமலைப்பேட்டை பேருந்து நிலையத்தில் தலைக்கு ஒரு பையை வைத்துக் கொண்டு நள்ளிரவில் மதுரைக்குச் செல்லும் பேருந்துக்காக படுத்திருந்ததை தோழர் மகேந்திரன் அவர்கள் தமது பதிவு ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

அவருடைய நெடியவாழ்வும் பயணமும் அன்றாடம் அவ்வாறுதான் அமைந்திருந்தது.

அவர் கடந்த இந்த நூற்றாண்டுகளின் இரண்டு காலகட்டங்களின் மனிதர். சுதந்திரப் போராட்ட காலம் அதற்கு பிந்திய காலம். ஒரு கையில் கால் மார்க்ஸ் மறுகையில் பாரதியார் என்று இயங்கியவர் என்று தினமணி தனது ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது தலையங்கம் "இனிமேல் இவர் போல் யாருளர்".

ஜீவானந்தம் ஜெயகாந்தன் போன்ற தோழர்களிடமும் காந்தி மார்க்ஸ் பாரதியைப் பற்றிய அபிமானத்தை நாம் பார்க்க முடியும். மறைந்த ஊடகவியலாளர் சோ ராமசாமி அவர்கள் அவரது அன்றைய துக்ளக்கில் அடிக்கடி குறிப்பிடுவார் இந்திய அரசியல் பரப்பில் கம்யூனிஸ்டுகள் ஊழலற்றவர்கள் நேர்மையானவர்கள்

(தொர்ச்சி 14ஆம் பக்கம்...)

# அரசற்ற மக்களாகத் தமிழ் மக்கள்!

- கலாநிதி சந்திரசேகரம் பரமலிங்கம்
(சட்டத்தரணி)

குடியேற்ற நாடுகளில் ஏகாதிபத்திய அரசின் ஆட்சி முடிவுக்குக்கொண்டு வரப்பட்டபோது, சர்வதேச நீதிமன்றத்தில் அந்நிய ஆட்சியின் முடிவாக்கம் தொடர்பான சட்டப் பிரச்னைகள் சில எடுத்துக் கொள்ளப்பட்டன என்பது உண்மைதான். ஆனால், இலங்கைத் தீவில் தமிழர்களது பூர்வீக அரசுகளை சிங்கள அரசுகளின் ஆட்புலங்களோடு இணைத்து - சிங்களவர்கள் முறையற்ற முறையில் பலனடையவும் - தமிழர்கள் அடக்குமுறைக்கும், அட்டூழியங்களிற்கும் கடந்த 78 ஆண்டுகளாக ஆளாக்கப்பட்டிருக்கும் நிலைமையும் கவனத்தில் எடுக்கப்படவில்லை. இவையனைத்துக்கும் அடிப்படைக் காரணிகளாக ஆங்கிலேயரால் 1948ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தவறான குடியேற்றவாத ஆட்சியின் முடிவாக்கமும், ஒற்றையாட்சி முறைமையும் அமைந்தன.

கொசோவா மக்களின் தன்னாட்சி மீட்கப்பட்ட அண்மைக்கால உதாரணம் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது. கொசோவாப் பிராந்தியத்தின் அரசியற் சட்ட ரீதியான தன்னாட்சி அந்தஸ்தினை யூகோஸ்லாவிய சமஸ்டிக் குடியரசு ரத்துச்செய்தபோது, 1998ஆம் ஆண்டு கொசோவாவில் வெடித்தெழுந்த உள்ளூர்க் கிளர்ச்சி - சர்வதேசப் பரிமாணத்தையடைந்தது. வட அத்திலாந்திக் உடன்படிக்கை அமைப்பின் இராணுவத் தலையீடும், அதனையடுத்து ஐ.நா.வின் பாதுகாப்புச் சபையினது 1244 (1999) தீர்மானமும், கொசோவா மக்களுக்கு நிவாரணத்தை வழங்கியமை இங்கு கவனிக்கப்படவேண்டும்.

முற்றுமுழுவதாக கொசோவாவின் உள்ளூார் இன மோதலின் தன்மைகளைக் கொண்டிருந்த தமிழர்களது அரசியற் சட்ட நீதிக்கான போராட்டம், வீட்டோ நாடுகளது இனவாதத்தாலும், புவிசார் அரசியற் காரணங்களாலும், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினதோ அன்றி பாதுகாப்புச் சபையினதோ கவனத்திற்கும் உட்படாமல்போனது துரதிர்ஷ்டமானதாகும்.

ஐக்கிய நாடுகள் சபை முறைமையின் கீழ் தேசிய இனத்தின் இறைமைக் கோரிக்கைக்காகவோ அன்றி குடியேற்றவாதத் தவறுகளிற்கோ, சர்வதேச நீதித்துறையினை அணுகுவதற்கான சட்ட உரிமை தமிழர்களுக்கு இல்லாமலாக்கப்பட்டிருக்கிறது. அரசற்ற மக்களாக தமிழ் மக்கள் இருப்பதனால் நிராகரிக்கப்படுகிறது.

அரசுகளது சங்கம், ஐக்கிய நாடுகள் சபை என்ற இரு சர்வதேச அமைப்புகள் உருவாக்கப்பட்டு, அவற்றினால் முன்னெடுக்கப்பட்ட பல மனித உரிமை உடன்படிக்கைகள், சிறுபான்மையோரது உரிமைப் பாதுகாப்புச் சாசனங்களை ஏற்படுத்தியிருக்கிறது. சிறுபான்மையோருக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், இன அழிப்புக்கான தடையும், தண்டனையும் (1951) போன்ற சட்ட ஏற்பாடுகளை உருவாக்கியுள்ளது. இவை அரசுகளது தேசிய அரசியற் சட்டங்களில் தீர்க்கமான வலுவைச் செலுத்துகின்றன.

சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் (1948), "மனிதன் இறுதி ஆயுதமாக, கொடுங்கோன்மைக்கும் அடக்குமுறைக்கும் எதிராகக் கிளர்ச்சி செய்ய நிர்ப்பந்திக்கப்படாமலிருக்கவேண்டுமானால், சட்ட ஆட்சி மூலம் மனித உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்பது அத்தியாவசியமானது" என்று குறிப்பிடுகின்றது.

இன்று - உலக அரசுகள் பலவும், மனித உரிமைகள், சட்ட ஆட்சி, சனநாயக ஆட்சி முறைமைகளைப் பாதுகாப்பதற்கும் வளர்த்தெடுப்பதற்குமாகப் பல சர்வதேச, பிராந்திய, அமைப்புகளில் அங்கத்துவம் பெற்றுள்ளன.

இவற்றிற்கு உதாரணமாக, பிரித்தானிய பொது நலவாய நாடுகள், கூட்டுச்சேரா அணி, தெற்காசியப் பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பு, ஐரோப்பிய ஒன்றியம், ஆப்பிரிக்க ஒன்றியம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவற்றின் தீர்மானங்களும் பிரகடனங்களும், அங்கத்துவ அரசுகள்மீது சட்டக் கடப்பாடுகளை உருவாக்கியுள்ளன. இதனால் அங்கத்துவ அரசுகள் அவற்றின் உள்நாட்டு ஆட்சிமுறையின் ஏற்கப்பட்ட சட்டப் பொறுப்புக்களை அங்கீகரித்து அமலாக்கும் கடப்பாட்டைக் கொண்டுள்ளன.

சட்ட ஆட்சி, அரசியற் சட்ட நீதி, சர்வதேச மனித உரிமைகள், சனநாயக ஆட்சியின் சட்டப்பரிமாணங்கள் போன்ற சட்டக் கோட்பாடுகள் தோன்றி - சட்ட வளர்ச்சியடைந்து, சட்டத் தத்துவங்களாக பரிணமித்துள்ளன. இன்றைய சர்வதேச ஒழுங்குமுறையில் அரசுகளது அரசியற் சட்ட நீதி என்ற கோட்பாடு முதன்மையும், முக்கியத்துவமும் பெறுகின்றது. சர்வதேசச் சங்கத்தினதும், அதன் முடிவோடு உருவான ஐக்கிய நாடுகள் சபையினதும் நகர்வுகளால் உருவாக்கப்பட்ட சர்வதேச மனித உரிமைகள், சர்வதேச சிறுபான்மையோர் உரிமைகள், அரசியல், சமூக, கலாசார, பொருளாதார உரிமைகள், சனநாயக ஆட்சியின் சட்டப் பரிமாணங்கள் ஆகியன உள்ளடங்கலான வளர்ச்சி என்பன தேசிய அரசியற் சட்டங்களை சர்வதேச சட்டத்தின் சட்ட தத்துவங்களிற்குட்பட்டதாகத் தேசிய அரசியற் சட்டங்களை மாற்றிய நிலைமைகளை அவதானிக்க முடியும்.

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னெடுக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்ட விவகாரங்கள் உறுப்புரிமை நாடுகளது பங்குபற்றுதலினூடாகவே உருவாக்கப்பட்டு, அவற்றின் ஒப்புதலின் பின்னரே நடைமுறைக்கு வருகின்றன. இந்நிலையில் - தேசிய அரசியற் சட்டங்களில் உள்ளடக்கப்படும் பெருமளவிலான விடயங்களும் விவகாரங்களும், சர்வதேச சட்டத்திற்கு அமைந்தனவாகவும், ஏற்புடையதாகவும் அமையவேண்டும் என்பது துலாம்பரம்.

சிங்கராஜா எதிர் சிறிலங்கா என்ற வழக்கு, ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைச் சட்டக்குழுமத்தின் தீர்ப்பினை அமுலாக்குவதில் உள்ள இடர்ப்பாடுகளை வெளிப்படுத்துகிறது.

பிரதம நீதியரசர், சரத் என். சில்வா, ஐக்கிய நாடுகள் சபை, 1997ஆம் ஆண்டின் மனித உரிமைகள் விசாரணை ஆணைக்குழு தொடர்பான ஆவணம் இலங்கையின் சட்டமுறைமையில் அங்கமாகும் என்று பிரகடனப்படுத்தியிருந்தாலும், இலங்கையின் அரசியற் சட்டத்தின் பிரிவின்படி 33(f), மேற்படி பிரகடனம் அரசியற் சட்டத்திற்கு முரணானது என்று காரணம் காட்டி, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்ப்பு இலங்கை நீதித்துறையைக் கட்டுப்படுத்த முடியாது என்று தீர்ப்பு வழங்கியமை, ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச விசாரணைக் குழுத் தீர்ப்புகளை இலங்கையில் அமுலாக்கப்படமுடியாத அவல நிலைமைகளைச் சுட்டிக்காட்டுகின்றன.

சிறுபான்மையோரின் உரிமைகளைப் பாதுகாக்கும் சர்வதேசச் சட்டங்களின் தத்துவம், இலங்கையின் தேசிய அரசியற் சட்டங்களில் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டிருப்பதை நாம் கவனத்திற் கொள்ளவேண்டும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க வெளியுறவு கொள்கையை தீர்மானிக்கும் யூத அரசியல் அமைப்புக்கள்!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

தற்போது ஈரானை தாக்க வேண்டும், ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதில் முனைப்பாக உள்ளது இஸ்ரேலிய அரசு. யூத அமைப்புகள் என்ன சொல்கின்றனவோ அதனையே வாஷிங்டன் அரசு செய்கிறது.

அமெரிக்க வெளியுறவுக் கொள்கையை, குறிப்பாக மத்திய கிழக்கு விவகாரங்களில், தீர்மானிப்பதில் யூத லாபிக்கள் மிக முக்கிய மற்றும் சக்திவாய்ந்த அமைப்பாக பங்காற்றுகிறார்கள். இந்த அமைப்புக்கள் (லாபிக்கள்) அமெரிக்கா - இஸ்ரேல் இடையேயான உறவை வலுப்படுத்துவதையும், இஸ்ரேலுக்கு நிபந்தனையற்ற ஆதரவை அமெரிக்கா வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றனர்.

முக்கிய யூத லாபிக்கள் மற்றும் அவர்களின் செயல்பாடுகளை பின்வரும் முக்கிய அமைப்புகள் ஆதரிக்கின்றன. இந்த அமைப்புகள் அமெரிக்காவின் மிகவும் செல்வாக்கு மிக்க லாபி குழுவாகும். இது இருகட்சி ஆதரவுடன் செயல்பட்டு, காங்கிரஸில் இஸ்ரேலுக்கு ஆதரவான சட்டங்களை நிறைவேற்ற அழுத்தம் கொடுக்கிறது.இவர்களது பலம் என்பது வெறும் பேச்சில் இல்லை, அது அவர்களது பணத்தில் தான் உள்ளது என்பதை காட்டுகிறது.

அமெரிக்கத் தேர்தல்களில் தங்களுக்கு ஆதரவான வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்ய அதனுடன் தொடர்புடைய கோடிக்கணக்கான டாலர்களைச் செலவிடுகின்றன. 1980களுக்கு முன்பிருந்தே, அமெரிக்காவின் நிதித்துறை, ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் துறையான ஹாலிவுட் போன்றவற்றில் யூத வம்சாவளியினரின் பங்களிப்பும் ஆதிக்கமும் அதிகம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

**அமெரிக்க கொள்கை வழிகாட்டுதல்:**

அத்துடன் அமைப்பாக மற்றும் இதர சார்பு குழுக்கள், இஸ்ரேலை ஆதரிக்கும் அரசியல் வாதிகளுக்குத் தேர்தல் நிதி வழங்குகின்றன. 2024 தேர்தலில், மில்லியன் கணக்கான டாலர்களைப் பயன்படுத்தி இஸ்ரேலை எதிர்க்கும் வேட்பாளர்களைத் தோற்கடித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிபர் நிர்வாகத்துடன் நெருங்கிய தொடர்பில் இருந்து, இஸ்ரேலின் பாதுகாப்பு நலன்களை அமெரிக்காவின் நலன்களாக இந்த அமைப்புகள் முன்னிறுத்துகின்றன.

ஊடக கொள்கை கட்டுப்பாடு:

மேலும் இந்த அமைப்புகள் கல்வி நிறுவனங்கள் மற்றும் கொள்கை விளக்க குழுக்களில் செல்வாக்கு செலுத்தி, இஸ்ரேலுக்கு எதிரான விமர்சனங்களைத் தடுக்கின்றன. இவ்வாறு அமெரிக்க கொள்கையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகின்றன.

இஸ்ரேலுக்கு ஆண்டுதோறும் பில்லியன் கணக்கான டாலர்கள் ராணுவ மற்றும் பொருளாதார உதவி கிடைப்பதை இந்த லாபி உறுதி செய்வதுடன் நிபந்தனையற்ற ஆதரவை அளிக்கும் வகையில் இந்த அமைப்புகள் செயல்படுகின்றன.

இஸ்ரேலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களை அமெரிக்கா வீட்டோ மூலம் தடுத்து நிறுத்துவதற்கு இந்த லாபிக்கள் முக்கிய காரணமாக இருக்கின்றன. மத்திய கிழக்கு கொள்கை, ஈரான், பாலஸ்தீனம் தொடர்பான அமெரிக்க கொள்கைகள் இந்த லாபியின் செல்வாக்கின் கீழ் இருப்பதாகக் கூறப்படுகிறது.

ஜான் மியர்ஷைமர் மற்றும் ஸ்டீபன் வால்ட் போன்ற அறிஞர்கள், இந்த லாபியின் செல்வாக்கு அமெரிக்காவின் சொந்த நலன்களுக்குப் பாதகமாக இருக்கலாம் என்று வாதிட்டாலும், அமெரிக்க அரசியலில் அவர்களின் பிடி இன்னும் வலுவாகவே உள்ளது












**அமெரிக்க வெளியுறவு கொள்கை:**

உலகப் பொருளாதாரத்தை இயக்கும் வோல் ஸ்ரிட் முதல் முக்கிய செய்தி நிறுவனங்கள் வரை இஸ்ரேலியர்களின் செல்வாக்கு பரவியுள்ளதால், அமெரிக்கா என்பது இஸ்ரேலின் நலன்களைக் காக்கும் ஒரு கவசமாகவே செயல்படுகிறது என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

இஸ்ரேலுக்கு எதிராக அல்லது பாலஸ்தீனத்திற்கு ஆதரவாகப் பேசும் முற்போக்கு வேட்பாளர்களைக் குறிவைத்து, அவர்களுக்கு எதிரான வேட்பாளர்களுக்குப் பல மில்லியன் டாலர்களை இந்த அமைப்புகள் வாரி வழங்குகிறார்கள். இதன் மூலம், இஸ்ரேலை விமர்சித்தால் அரசியல் எதிர்காலம் முடிந்துவிடும் என்ற அச்சத்தை அமெரிக்க நாடாளுமன்றத்தில் உருவாக்கியுள்ளனர்.

**அமெரிக்காவை எளிதாக கையாளும் இஸ்ரேல்:**

1980களில் பெஞ்சமின் நெதன்யாகு ஒரு தொலைக்காட்சி நேர்காணலில் பங்கேற்ற போது அவர் இஸ்ரேலின் தூதராக அல்லது ஒரு இளம் அரசியல்வாதியாக அறியப்பட்டார்.

அந்த நேர்காணலில் அவர் அமெரிக்காவை நாம் எளிதாகக் கையாளலாம், நாம் சொல்வதைத்தான் அவர்கள் செய்வார்கள் என கூறினார்.

அத்துடன் அமெரிக்க செனட் சபை மற்றும் காங்கிரஸ் சபையில் இஸ்ரேலுக்கு ஆதரவான நிலைப்பாடு மிக வலுவாக இருப்பதாக அவர் குறிப்பிட்டார். அமெரிக்காவில் உள்ள இஸ்ரேலிய ஆதரவு லாபிக்கள் அமெரிக்காவின் கொள்கை முடிவுகளில் பெரும் செல்வாக்கு செலுத்துகின்றன என்று அவர் விவரித்தார்.

இந்த வலுவான செல்வாக்கின் காரணமாக, அமெரிக்காவால் இஸ்ரேலை எந்தவொரு விஷயத்திலும் வற்புறுத்தவோ அல்லது அவர்களுக்கு விருப்பமில்லாத முடிவுகளை எடுக்கத் தூண்டவோ முடியாது என்று அவர் தன்னம்பிக்கையுடன் கூறினார். இந்தக் கருத்துக்கள் இஸ்ரேலிய ஆதரவு அமைப்புகள் அமெரிக்க அரசியலில் எவ்வளவு ஆழமாக வேரூன்றியுள்ளன என்பதை தெளிவாக விளக்குகின்றன. அமெரிக்காவின் வெளியுறவுக் கொள் கையைத் தீர்மானிப்பதில் யூத லாபிக்கள் மிக முக்கியமான சக்தியாகக் கருதப்படுகின்றன.

**வாஷிங்டனில் மாநாடு:**

ஒவ்வொரு ஆண்டும் வாஷிங்டனில் நடைபெறும் மாநாட்டில், அமெரிக்காவின் முக்கிய அரசியல் தலைவர்கள் அனைவரும் கலந்துகொண்டு இஸ்ரேலுக்கான தங்கள் விசுவாசத்தை உறுதிப்படுத்துகிறார்கள்.

இன்றுவரை அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஆண்டுதோறும் வழங்கி வரும் 3.8 பில்லியன் டாலர் ராணுவ உதவிக்கு இந்தப் பண பலமும், அரசியல் அழுத்தமுமே முக்கியக் காரணம். அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் முதல் பதவியில் இருப்பவர்கள் வரை, இஸ்ரேலுக்குத் தங்கள் ஆதரவைத் தெரிவிப்பதைக் கடமையாகக் கொண்டுள்ளனர்.

ஜெருசலேமில் உள்ள "அழுகைச் சுவரில்" தலையணி அணிந்து மரியாதை செலுத்துவது என்பது புதிதாக பதவியேற்ற ஒவ்வொரு அமெரிக்க தலைவருக்கும் கட்டாயமான ஒரு சம்பிரதாயமாகவே மாறிவிட்டது.

இது ஒரு மதச்சார்பற்ற நாட்டின் தலைவர்கள், மற்றொரு நாட்டுக்குச் செய்யும் அரசியல் விசுவாசம் என பலரால் பார்க்கப்படுகிறது. இந்த விதியை மீறுபவர்கள் அரசியல் ரீதியாகப் புறக்கணிக்கப்படுவதோ அல்லது கடுமையான எதிர்ப்பைச் சந்திப்பது வழக்கமாக உள்ளது.

இந்த அதிகாரப் படிநிலைக்கு சவால் விடுத்தவராக முன்னாள் அதிபர் ஜோன் கென்னடி திகழ்ந்தார். 1960-களின் தொடக்கத்தில், இஸ்ரேல் தனது டிமோனா அணு உலையில் அணு ஆயுதங் களைத் தயாரிப்பதற்கான ரகசிய வேலைகளைத் தொடங்கியது.

அன்றைய அமெரிக்க அதிபர் கென்னடி மத்திய கிழக்கில் அணு ஆயுதப் போட்டி உருவாவதை முற்றிலும் எதிர்த்தார். இஸ்ரேல் அணு ஆயுதம் பெறுவது உலக அமைதிக்கு ஆபத்து என்று அவர் நம்பினார்.

கென்னடி அன்றைய இஸ்ரேலியப் பிரதமர் டேவிட் பென்-குரியனுக்கு எழுதிய கடிதங்களில், டிமோனா அணு உலையை சர்வதேச ஆய்வாளர்கள் சோதனையிட அனுமதிக்க வேண்டும் என்று மிகவும் கடுமையாக வலியுறுத்தினார்.

இஸ்ரேலின் அணுசக்தித் திட்டத்தை நிறுத்தத் தவறினால், அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்குமான உறவு பாதிக்கப்படும் என்று அவர் எச்சரித்தார். கென்னடி இந்த அழுத்தத் தைக் கொடுத்த சில மாதங்களிலே யேவ 1963 நவம்பரில் படுகொலை செய்யப்பட்டார்.

அவருக்குப் பின் வந்த லின்டன் பி. ஜான்சன், இஸ்ரேலின் அணுசக்தித் திட்டத்தின் மீதான பிடியைத் தளர்த்தினார். அதன்பின்னர் இஸ்ரேல் தாராளமாக தங்கு தடையின்றி 90 ற்கு மேற்பட்ட அணுகுண்டுகளை தயாரித்து வைத்துள்ளது. இதுவே கென்னடியின் மரணத்திற்கும் இஸ்ரேலிய உளவு அமைப்பான மொசாட்டிற்கும் தொடர்பு என்றும் சொல்லப்படுகிறது.

கென்னடி போன்ற தலைவர்கள் இஸ்ரேலின் அணுசக்தித் திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போட முயன்ற போது அவருக்கு ஏற்பட்ட ஆபத்துக்களை நன்கு உணர்ந்த எதிர்கால அமெரிக்கத் தலைவர்கள் இஸ்ரேல் சொல்வதை செய்யும் பொம்மைகள் ஆக்கப்பட்டனர் என்பது வரலாறு. இதுவரைக்கும் எந்த வொரு அமெரிக்க தலைவர்களும் இஸ்ரேலின் உத்தரவை மீறியதாக வரலாறே இல்லை. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரம்புக்கனை துப்பாக்கிச் சூடு!

# ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய கால அவகாசம் வழங்கிய நீதிமன்று

கொழும்பு, மார்ச். 01

2022 ஆம் ஆண்டு ரம்புக்கனை பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் இடம்பெற்ற அமைதிப் போராட்டத்தின் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்ததுடன், மேலும் பலர் காயமடைந்த சம்பவத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் தொடர்பான பதில் ஆட்சேபனைகளை தாக்கல் செய்வதற்கு உயர் நீதிமன்றம் மனுதாரர் தரப்புக்கு கால அவகாசம் வழங்கியது.

ஜனக் டி சில்வா, அச்சல வெங்கப்புலி மற்றும் கிஹான் குலதுங்க ஆகியோரைக் கொண்ட மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, இந்த வழக்கு தொடர்பான பதில் ஆட்சேபனைகள் தாக்கல் செய்யப்படவில்லை என்பதை நீதியரசர்கள் குழாம் மனுதாரர் தரப்பு சட்டத்தரணிகளுக்கு சுட்டிக்காட்டியது.

இதற்குப் பதிலளித்த மனுதாரர் தரப்பு சட்டத்தரணிகள், இந்தச் சம்பவத்தில் காயமடைந்த சில மனுதாரர்கள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வந்தமையால், பதில் ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய முடியாமல் போனதாகத் தெரிவித்தனர்.

எனவே, அவற்றைத் தாக்கல் செய்ய கால அவகாசம் வழங்குமாறு அந்த சட்டத்தரணிகள் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தனர்.

சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் ஷனில் குலரத்ன, இந்த மனுக்கள் தொடர்பான எழுத்துமூல சமர்ப்பணங்கள் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இதற்கமைய, பதில் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் அவற்றை ஜூலை 15 ஆம் திகதிக்கு முன்னர் தாக்கல் செய்யுமாறு மனுதாரர் தரப்புக்கு உத்தரவிட்ட நீதியரசர்கள் குழாம், மனு மீதான விசாரணையை செப்ரெம்பர் 08 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

(எ)

# நோய்வாய்ப்பட்ட நிலையில் சஞ்சரிக்கும் காட்டு யானை



மட்டக்களப்பு, மார்ச். 01

மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கன்னங்குடா பகுதியில் நோய்வாய்ப்பட்ட நிலையில் காட்டு யானை ஒன்று மக்கள குடியிருப்பை அண்மித்த பகுதியில் காணப்படுகின்றது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை வேளை முதல் குறித்த யானை வேறு எங்கும் நகர்ந்து செல்ல முடியாத நிலையில் குறித்த இடத்திலேயே நின்ற வண்ணம் உள்ளதாக அப்பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இதனிடையே தமது பகுதி களை காட்டு யானைகள் தினமும் துவம்சம் செய்து வரும் நிலையில் கிராமத்துக்குள் ஊடுருவ முயற்சித்த இந்த யானை நோய்வாய்ப்பட்ட நிலையில் அவ்விடத்திலேயே நிற்கின்றது.

எனினும் அது ஒரு காட்டு விலங்கு என்ற ரீதியில் தாம் வாழை, தென்னை போன்ற உணவுகளை வழங்கி வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில், அந்த காட்டு யானைக்கு வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சிகிச்சை வழங்கி வருவதாக தெரிவித்தனர். (எ)

# பெண்களுக்கு பாலியல் தொல்லை கொடுத்தவர் கைது

அக்கரைப்பற்று, மார்ச். 01

அம்பாறை- அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் யுவதி ஒருவருக்குத் தொடர்ச்சியாக பாலியல் தொந்தரவு கொடுத்து வந்த 46 வயது நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பிரதேசத்தை சேர்ந்த யுவதி ஒருவருக்கு, அதே பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய திருமணம் முடிக்காத நபர் ஒருவர் நீண்டகாலமாக பாலியல் தொந்தரவுகளை கொடுத்து வந்துள்ளார்.

இது குறித்து பாதிக்கப்பட்ட யுவதி அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டையடுத்து உடனடியாக செயல்பட்ட பொலிஸார், நேற்று முன்தினம் சந்தேகநபரை அவரது இல்லத்தில் வைத்து கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணைகளின் போது, அவர் அந்தப் பகுதியில் உள்ள பல பெண்களுக்கு நீண்டகாலமாக இவ்வாறு பாலியல் தொந்தரவுகளை கொடுத்து வந்தமை தெரியவந்துள்ளது.

சந்தேகநபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.(எ)

# லொறியுடன் ஓட்டோ மோதி விபத்து

நுவரெலியா, மார்ச். 01

கொட்டக்கலை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக ஓட்டோவும் லொறி ஒன்றும் மோதி விபத்துக்குள்ளாகின.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை பெற்றுக் கொண்டு, ஓட்டோ பிரதான வீதிக்கு பிரவேசிக்க முற்பட்டபோதே இந்த விபத்து ஏற்பட்டது.

தம்புள்ளையிலிருந்து நுவரெலியா நோக்கிச்சென்ற லொறியுடன் ஓட்டோ மோதியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுச் சனிக்கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றது.

குறித்த பகுதியில் நிலவிய கடும் பனியுடனான வானிலை காரணமாக இந்த விபத்து நேர்ந்ததாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்தது.

இந்த விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றபோதிலும், ஓட்டோவுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(எ)

## அறிவுக் கருவூலத்தின்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

16 வயதுக்கு கீழே உள்ள சிறார்களிடம் சுயநலமும், குரூர எண்ணங்களும், தவறான பழக்கங்களும் வளர்ந்து வருகின்றன. இதற்குக் காரணம் மாணவர்களிடையே செய்தித்தாள்கள், புத்தகங்கள் வாசிக்கும் பழக்கம் குறைந்து வருவதுதான் என்பது அனைவரும் அறிந்ததே.

வாசிப்பு என்பது நிலையானது, கால வெள்ளத்தில் அழியாதது. அது நமக்கு தகவல்களை மட்டும் தருவ தில்லை. நம் மனதை ஒருமுகப் படுத்துகிறது. கருத்துகளை ஒழுங்கமைக்கவும், அவற்றை தெளிவாகப் புரிந்து கொள் ளவும், சிந்தனையைத் தூண்டவும், பிறர்படும் துயரங்களையும், துன்பங்களையும் அறிந்து நம்மை நல்வழியில் பயணிக்கவும் உதவுகிறது. இதுதான் செய்தித்தாள்கள், புத்தகங்களின் பலம்.

“ஒரு கலாசாரத்தை அழிக்க புத்தகங்களை எரிக்க வேண்டியதில்லை. மக்கள் அவற்றைப் படிப்பதை நிறுத்தி விட்டால் போதும்” என்றார் அமெரிக்க எழுத்தாளர் ரே பிராட்பரி. நாட்டின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நிகழ்வுகளின் அனைத்து அம்சங்கள் குறித்த விரிவான மற்றும் புறநிலைத் தகவல்களை வழங்குவதே செய்தித்தாள் களின் முதன்மையான செயல்பாடாகும். எனவே, செய் தித்தாள்கள் உண்மைகளை முன்வைப்பது மட்டுமல்லா மல், அதன் ஆசிரியர் உரைகள் (எடிட்டோரியல்) மூலம் உண்மைகளின் விளக்கங்களையும், கருத்துகளின் சாராம் சங்களையும் வாசகர்களுக்கு வழங்குகிறது. மேலும், கருத்துகள் மற்றும் சித்தாந்தங்களையும் பரப்பி மக்களிடையே அறிவொளி பாய்ச்சுகின்றன.

எனவே, செய்தித்தாள்களையும், புத்தகங்களையும் நாளும் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு சமூகத்துக்கும், நாட்டுக்கும் பயனுள்ளவர் களாக வாழ் வோம். “உண்மையான வாசகன், வாசிப்பதை முடிப்பதே இல்லை” என்றார் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஆஸ் கார் வைல்ட் என்னும் எழுத்தாளர். ●

## தோழர் நல்லக் கண்ணு...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி...)

என்று பல சந்தர்ப்பங்களில் எழுதியதை பார்த்திருக்கிறேன்.

சமூக நேர்மை அர்ப்பணம் என்பவற்றின் வரைவிலக்கணமாக திகழ்ந்தவர் தோழர் நல்லக்கண்ணு.

சைதாப்பேட்டை என்று நினைக்கிறேன் . தொழிலாளி வர்க்க குடியிருப்புகளுக்கு நடுவே மிக எளிமையாக வாழ்ந்தவர். அவருடைய இந்த எழுச்சிக்கு அவரது குடும்பத்தினரின் தியாகம் விரிவாக குறித்து வைக்கப்பட வேண்டும்.

சொல்லுக்கும் செயலுக்கும் இடையே முரண்பாடுகள் இருந்ததில்லை. 1980 கள் 90களில் சென்னையின் சூளைமேடு சக்கரியா கலனி போன்ற இடங்களில் வாழ்ந்த அன்றைய தலைமுறை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தோழர்களும் அன்றைய தியாகராஜ நகர் போர்க்ரோடு பின்னர் செவாலியர் சிவாஜி சாலை என மாற்றப்பட்டது நாம் தோழர்கள் நாம் அயலவர்கள். அங்குமிங்கும் தோழர்கள் சந்தித்துக் கொள்வோம்.

தவிர என் சி பி எச் எமது புத்தக தரிசனம் நடமாடும் புத்தக விற்பனை நிலையங்கள் அமரத்துவமான புரட்சிகரமான வாசனை வீசிய காலம்.

உன்னத தோழர்களுடன் வரலாற்றின் ஒரு கட்டத்தில் பரிச்சயம் ஏற்படுத்திக் கொண்டது எமது பெருமிதம். அன்றைய ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தோழர்களுக்கு தோழர் ஆர் என் கே அரசியல் வகுப்புகள் நடத்தியுள்ளார் என்பதையும், புரட்சிகர இயக்கத்திற்கு புரட்சிகர அரசியல் சித்தாந்த வழிகாட்டல் இருக்க வேண்டும் என்பதையும் தென்னிலங்கையின் முற்போக்கு சக்திகளுடன் உறவை ஏற்படுத்த வேண்டிய அவசியத்தையும் அவர் வலியுறுத்தி இருக்கிறார்.

தோழர் பத்மநாபா இந்திய பொதுவுடமை இயக்கங்களுடன் பெரியார் இயக்கங்களுடன் இந்திய சுதந்திர இயக்கங்களுடன் மிகுந்த பிரயாசையுடன் சர்வதேச சகோதரத்துவ உணர்வுடன் உறவுகளை வளர்த்தவர். பலப்படுத்தியவர். வரலாற்றில் வாழும் தோழர்களுடன் பரிச்சயத்தை ஏற்படுத்த முடிந்தது. எம்மைப் பொறுத்தவரை இந்த உறவுகள் மகத்தான தருணங்கள்.

தோழர் நல்லக்கண்ணு போன்ற தலைவர்களை சந்திப்பதில் எந்தச் சடங்காசாரமும் சம்பிரதாயங்களும் இருந்ததில்லை எளிமையான தோழமை.

தோழர் ஜெயகாந்தன் சொல்வாரே, கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்திற்கு தூக்குக் கம்பியில் தேநீர் கொண்டு வந்த என்னை அருகமர்த்தி தோழரே என்று சொன்ன உன்னத மனிதர்கள் பற்றி.

இன்றைய சுற்றாடல் பேரழிவுகள் தீண்டாமை கொடுமைகள் ஈவிரக்கமற்ற சுரண்டல் பிரம்மாண்டமான இடைவெளி கொண்ட வர்க்க ஏற்றத்தாழ்வு உலகளாவிய நவகாலனித்துவ ஆக்கிரமிப்புகள் தோழர் ஆர் என் கே யின் ஞான வெளிச்சத்தில் அணுகப்பட வேண்டும். இந்திய உபகண்ட வெளியில் உருவான மகத்தான தலைவர் அவர்.

ராஜம் கிருஷ்ணன் அவர்கள் பாதையில் பதிந்த அடிகள் என்ற நாவலை ஒரு தொடராக 1990களின் முற்பகுதியில் தினமணி கதிரில் எழுதி வந்தார்.

தீண்டாமை கொடுமை சவுக்கடியும் சாணி பாலும் எனக் கொடூரமாக இருந்த காலத்தில் பொதுவுடமை இயக்கமும் திராவிட இயக்கமும் சந்திக்கும் புள்ளி உருவானதாக அவர் எழுதியிருந்தார். அத்தகைய ஒரு வரலாற்று போக்கின் நடமாடும் உதாரணமாக தோழர் நல்லக்கண்ணுவின் வாழ்வும் பணியும் அமைந்திருந்தன.

1840களில் தோழர்கள் மார்க்ஸ் ஏங்கல்ஸ் இருவராலும் எழுதப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையின் சாரம்சத்தின் 20 மற்றும் 21 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியின் இந்திய தமிழக வெளியில் அர்பணிப்புள்ள செயற்பாட்டாளராக திகழ்ந்தவர் தோழர் நல்லகண்ணு.

பொதுவுடைமை இயக்கத்தின் மகத்துவத்தை உன்னதத்தை தனது வாழ்வின் மூலம் நிலைநாட்டி சென்றவர். புதிய தலைமுறைக்கு பேரொளி வீசி சென்றவர் தார்மீகத்திசை காட்டி! பாரதி பாடியது போல் “தேடிச் சோறு நிதம் தின்று பல சின்னஞ் சிறு கதைகள் பேசி மனம் வாடி துன்பம் மிக உழன்று பிறர் வாடப் பல செயல்கள் செய்து நரை கூடிக் கிழப்பருவம் எய்தி கொடுங் கூற்றுக்கிரையெனப் பின் மாயும் வேடிக்கை மனிதரைப் போலே வீழ்வேன் என்று நினைத்தாயோ” என்று ஆவேசமாக ஒரு நூற்றாண்டு கடந்து வாழ்ந்து மறைந்தவர். தோழர் நல்லக்கண்ணு பிறந்தது இந்திய பொதுவுடமை இயக்கம் பிறந்த 1925 டிசம்பர் 26 ன் இரு வருடங்களுக்கு முன்னர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸ்ட் தோழர் சீதாராம் யெச்சூரி அவர்கள் மறைவுக்கு அவரது உடலைச் சுற்றி நின்று ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு பெருந் துயரடைந்த பறவைகள் கூட்டம் போல் “லால் சலாம் லால் சலாம்” என என்ன அஞ்சலி செலுத்தினார்கள். அதனை பல தடவை திரும்பத் திரும்ப பார்த்தேன்.

அதே போல் தோழர் நல்லக்கண்ணுவின் மருத்துவ பீடத்தை நோக்கிய இறுதிப்பயணத்தில் வீரவணக்கம் வீரவணக்கம் வான் முட்டியது. இந்த மந்திர சொற்கள் மனதை ஊடுருவி நிற்கின்றன. செவ் வணக்கம் தோழருக்கு! ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்ரேல்...

இடங்களில் சக்திவாய்ந்த வெடிச்சத்தங்கள் கேட்கப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தெஹ்ரானில் உள்ள முக்கிய இராணுவ தளங்கள் மற்றும் அரசியல் மையங்கள் இலக்காகக் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈரான் ஜனாதிபதியின் வாசஸ்தலம், புலனாய்வுத் துறை அமைச்சகம், முக்கிய அரசியல் தலைவர்களின் இருப்பிடங்கள், உச்ச தலைவர் ஆயதுல்லா அலி கமேனி அலுவலகத்திற்கு அருகிலுள்ள பகுதிகளிலும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

எனவே, ஈரானின் ஆன்மீகத் தலைவர் பாதுகாப்பான இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

தாக்குதலைத் தொடர்ந்து, இஸ்ரேலில் "உடனடி அவசர நிலை" பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இஸ்ரேல் வான்வெளி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

மக்களுக்கு எச்சரிக்கை சைரன்கள் ஒலிக்கப்பட்டுள்ளன. ஈரான் மற்றும் அதன் அண்டை நாடுகளின் வான்வெளிகளில் விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா தனது இராணுவப்படைகளை மத்திய கிழக்கில் குவித்து வந்த நிலையில், இந்த நேரடி தலையீடு முழு அளவிலான போருக்கான அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ)

## இனப்பிரச்னைக்கு...

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்-

இனப்பிரச்னைக்குச் சரியானதொரு தீர்வை உருவாக்க வேண்டும் என்பதை எமது தேர்தல் அறிக்கையிலேயே நாம் உறுதியளித்திருந்தோம். மாகாண சபைகள் அந்த நோக்கத்தை முழுமையாக நிறைவேற்ற உதவவில்லை என்பது எமது கருத்து.

எவ்வாறாயினும், ஒரு சிறந்த மாற்றுத் தீர்வைத் தேடும் வரை மாகாண சபைகள் அவ்வாறே இருக்கும். முறையான மாற்றுத் தீர்வொன்றை எட்டாமல் அவற்றை நாம் அகற்றப்போவதில்லை.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டச் சிக்கல் காரணமாகவே மாகாண சபைகளை தற்போது இயக்க முடியாத சூழல் காணப்படுகிறது.

இந்த ஆண்டில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த நாம் திட்டமிட்டிருந்தபோதிலும், "டித்வா" புயல் அனர்த்த காரணங்களால் அது சாத்தியப்படவில்லை.

மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், அதனை எவ்வாறு நடத்துவது என்பதே தற்போதைய கேள்வி. தேர்தலை நடத்துவதற்குத் தடையாக உள்ள சட்டச் சிக்கல்கள் நீக்கப்படவேண்டும். அத்துடன் எல்லை நிர்ணயம் தொடர்பிலும் நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

எல்லை நிர்ணய நடவடிக்கைகளை முன்னெடுப்பதா இல்லையா என்பது குறித்து நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது. இது குறித்து விரிவாக ஆராய்வதற்காக தற்போது ஒரு விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

## பயங்கரவாதத் தடை...

போராட்டக்காரர்கள், அங்கிருந்து பேரணியாக வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் வரை சென்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், சிவில் அமைப்பினர், கல்விச் சமூகத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பெருமளவிலானோர் கலந்துகொண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகக் கோசங்களை எழுப்பினர்.

கிழக்கு மாகாணத்தில், மட்டக்களப்பு கல்லடிப் பாலத்துக்கு அருகில் போராட்டக்காரர்கள் ஒன்று கூடினர். அங்கிருந்து பேரணியாகப் புறப்பட்ட அவர்கள் மட்டக்களப்பு காந்தி பூங்காவைச் சென்றடைந்தனர்.

இங்கு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மதத் தலைவர்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் எனப் பல தரப்பட்டோர் பங்கேற்றனர்.

தற்போது நடைமுறையில் உள்ள அடக்குமுறை மிகுந்த "பயங்கரவாதத் தடைச் சட்டத்தை" உடனடியாக நீக்க வேண்டும் எனவும், அதற்குப் பதிலாக அரசாங்கம் கொண்டுவர முயற்சிக்கும் புதிய "பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை" முற்றாகக் கைவிட வேண்டும் எனவும் போராட்டக்காரர்கள் இதன்போது வலியுறுத்தினர். (அ)

## கச்சதீவு...

வரலாற்று சிறப்புமிக்க கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

நெடுந்தீவு பங்குத்தந்தை அருட்தந்தை பத்திநாதன் அடிகளால் திருவிழா கொடி ஏற்றிவைக்கப்பட்டு உற்சவ நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கொடியேற்றத்தைத் தொடர்ந்து, சிலுவைப் பாதை, நற்கருணை ஆராதனை மற்றும் திருச்சொரூபப் பவனி என்பன இடம்பெற்றிருந்ததுடன் யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜோசப்தாஸ் ஜெபரட்ணம் தலைமையில் பங்குத்தந்தையர்களின் பங்குபற்றலுடன் விசேட ஆராதனைகள் இடம்பெற்றன.

தொடர்ந்து நேற்று சனிக்கிழமை காலை திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜோசப்தாஸ் ஜெபரட்ணம் தலைமையில், இலங்கை மற்றும் இந்திய அருட்தந்தையர்கள் இணைந்து திருவிழா திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்

இலங்கை - இந்திய பக்தர்களின் உறவுப் பாலமாகவுள்ள கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவில் இந்த ஆண்டு 13ஆயிரத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

## சிறீலங்கன்...

பிற வடக்கு நாடுகளுக்கான சிறீலங்கன் விமான சேவைகள் நிறுவனத்தின் விமானங்கள் சவூதி அரேபிய வான்வெளி வழியாக திருப்பி விடப்படுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஈரான், ஈராக் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளைத் தொடர்ந்து ஐக்கிய அரபு இராச்சியம், கட்டார் மற்றும் குவைத் ஆகிய நாடுகளும் தங்களது வான்பரப்புகளை மூடியுள்ளன.

இதன் காரணமாக மேலும் தாமதங்கள் ஏற்படக்கூடும் என சிறீலங்கன் விமான சேவைகள் நிறுவனம் அறிவித்துள்ளது.

சிறீலங்கன் விமான சேவைகள் நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில்,

இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான மோதல் போக்கு தீவிரமடைந்துள்ளதைத் தொடர்ந்து, மத்திய கிழக்கின் பல நாடுகளின் வான்பரப்பு மூடப்பட்டுள்ளமையால் விமானச் சேவைகளில் தாமதங்கள் ஏற்படக்கூடும்.

பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், விமானச் சேவைகளைத் தடையின்றி முன்னெடுக்கவும் சில விமானங்கள் சவூதி அரேபிய வான்பரப்பு ஊடாக மாற்று வழிகளில் இயக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## யாழில்...

நிலையில் இவ்வாறு யாழ்ப்பாணத்தில் எரிபொருளுக்கு வரிசை ஏற்பட்டது.

யாழ்ப்பாணத்தின் அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு மக்கள் வரிசையில் நின்றதை அவதானிக்க முடிந்தது. (அ-05)

## எரிபொருள்...

கூட்டுத்தாபனம் அறி வித்துள்ளது.

அதன்படி, லங்கா டீசல் நான்கு ரூபாயால் அதிகரிக்கப்பட்டு 281 ரூபாயாக விற்பனை செய்யப்படவுள்ளது.

அத்துடன், லங்கா சுப்பர் டீசல் 6 ரூபாயால் அதிகரிக்கப்பட்டு 329 ரூபாயாக விற்பனை செய்யப்படவுள்ளது.

அதேநேரம், ஒக்ரைன் 92 ரக பெற்றோல், ஒரு ரூபாயால் அதிகரிக்கப்பட்டு 293 ரூபாயாக விற்பனை செய்யப்படவுள்ளது.

எனினும், ஒக்ரைன் 95 ரக பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் விலையில் எந்தவித மாற்றமும் மேற்கொள்ளவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஒக்ரைன் 95 ரக பெற்றோல் 340 ரூபாய்க்கும், மண்ணெண்ணெய் 182 ரூபாய்க்கும் அதே விலையிலேயே விற்பனை செய்யப்படவுள்ளது. (அ)

## பயங்கரவாத சட்டத்தை ...

நடாத்தப்பட்ட கையெழுத்துப் போராட்டம் நேற்று முன்தினம் நிறைவுக்கு வந்தது.

அதனையடுத்து திரட்டப்பட்ட அனைத்துக் கையெழுத்துக்களும் நேற்று நீதியமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கையெழுத்துப் பிரதிகள் ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம், சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களுக்கும், இந்தியா, அமெரிக்கா, சுவிஸ், சீனா உள்ளிட்ட தூதரகங்களிடம் நேரில் கையளிக்கவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ)

## தேவையான...

காங்கேசன்துறையிலுள்ள பெற்றோல் களஞ்சியம் வழமைபோல் ஞாயிற்றுக்கிழமை மூடப்படுவதால் சகல எரிபொருள் நிலையங்களுக்கும் நாளை திங்கட்கிழமையிலிருந்து பெற்றோல் விநியோகிக்கப்படு எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் டி. ஜே. ஏ. எஸ். டி. எஸ். ராஜபக்ஷவுடன் தொலைபேசி மூலம் தாம் தொடர்புகொண்டபோது, நாட்டுக்குத் தேவையான ஒரு மாதத்திற்கான பெற்றோல் கையிருப்பில் இருப்பதாக தம்மிடம் தெரிவித்துள்ளார் எனவும் அரசாங்க அதிபர் தெரியப்படுத்தியுள்ளார். (அ-05)

## இராணுவ...

தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் குறிப்பிட்டதாவது:-

2024 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்கள் இலங்கையில் ஒரு புதிய அரசியல் சூழலை உருவாக்கியுள்ளன. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசு ஊழல் ஒழிப்பு, பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்துதல் போன்ற வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. இந்த மாற்றங்களை நோர்வே வரவேற்கின்றது.

இருப்பினும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இன்றும் பல சவால்கள் நிலவுகின்றன என்பதை நாம் அறிவோம். குறிப்பாக நில அபகரிப்பு, இராணுவம யமாக்கல் மற்றும் சிறுபான்மையினரின் மத உரிமைகள் மீதான கட்டுப்பாடுகள் குறித்த தகவல்கள் எமக்குக் கிடைத் துள்ளன. இது தொடர்பாக நாம் இலங்கை அரசுடன் நேரடியாகக் கலந்துரையாடி வருகின்றோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் மற்றும் செம்மணி உள்ளிட்ட பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பான விசாரணைகள் நியாயமான முறையிலும், வெளிப்படையாகவும் நடத்தப்படவேண்டும் என்பதில் நோர்வே உறுதியாக உள்ளது. உண்மை கண்டறியப்படும்போது மாத்திரமே பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதியைப் பெற்றுத்தர முடியும்.

இலங்கையில் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்படும் தீர்மானங்களுக்கு நோர்வே தொடர்ந்து ஆதரவு வழங்கி வருகின்றது.

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் மற்றும் அதன் பின்னரான விசாரணைகள் குறித்தும் நாம் கவனம் செலுத்தி வருகின்றோம்.

இலங்கை அரசு சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளின்படி, மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நேர்மையான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். - என்றார். (அ)

## யுத்தம்...

தெரிவித்தாவது-

நான் 1988 ஆம் ஆண்டு இலங்கையில் யுத்தச் சூழலில் பிறந்தேன். நான் எனது தாயின் கருவறையில் இருந்தபோது, ஒவ்வொரு முறை விமானத் தாக்குதலுக்கான அபாய எச்சரிக்கை ஒலிக்கும்போதும், எனது தாய் கோயில்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சம் புகுவார். நானும் எனது தம்பியும் இலங்கையிலேயே பிறந்தோம். ஆனால், வாழ்க்கை எங்களைப் பாதுகாப்பான நாடான நோர்வேக்கு அழைத்து வந்தது.

2009 ஆம் ஆண்டு இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது. ஆனால், யுத்தம் முடிவடைவது என்பது மோதல்கள் அனைத்தும் தீர்ந்துவிட்டதாகப் பொருள் கொள்ளாது.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அண்மையில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழிகள், குறிப்பாக செம்மணியில் கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் கடந்த காலத்தின் கொடூரங்களை நினைவூட்டுகின்றன.

அங்கு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பலரது எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. இது தற்செயலான நிகழ்வல்ல் மாறாக பல தசாப்தங்களாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கதைகளுடன் இது தொடர்புடையது.

இலங்கையில் 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல்கள் சர்வதேச மட்டத்தில் ஒரு புதிய நம்பிக்கையைத் தோற்றுவித்தன.

குறிப்பாக, புதிய அரசு ஊழலுக்கு எதிராக எடுத்த நிலைப்பாடு மற்றும் அரசியல் சீர்திருத்தம் குறித்த வாக்குறுதிகள் அந்த நம்பிக்கைக்குக் காரணமாக அமைந்தன.


இருப்பினும், அந்த வாக்குறுதிகள் உண்மையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்ற கேள்வி எழுகின்றது. தமிழர் வாழும் பகுதிகளில் இன்றும் இந்துக்கோயில்கள் இடிக்கப்படுவதாகவும், பௌத்த விகாரைகள் நிறுவப்படுவதாகவும் தகவல்கள் வருகின்றன. வடக்கு மற்றும் கிழக்கில் புதிய மனிதப் புதை குழிகள் கண்டறியப்படுவதும், நிலங்கள் தொடர்ந்து இராணுவக் கட்டுப்பாட்டில் இருப்பதும் கவலைய ளிக்கின்றது - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஈரானில் உள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உடன் உறுதிப்படுத்துக!

## அரசிடம் சஜித் பிரேமதாஸ கோரிக்கை



கொழும்பு, மார்ச் 01

ஈரானில் உள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என எதிர்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

இஸ்ரேலின் ஈரான் மீதான தாக்குதலை தொடர்ந்து எதிர்கட்சித்தலைவர் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் இந்த பதிவை செய்துள்ளார்.

இந்த பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளதாது ,

"ஈரானில் ஏற்பட்டுள்ள தீவிர இராணுவ நடவடிக்கையின் காரணமாக அங்கிருக்கும் இலங்கையர்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ளது. அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அரசாங்கம் உடனடியாக இராஜதந்திர மற்றும் அவசரகால நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" என எதிர்கட்சித்தலைவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# பாடசாலை அதிபர் நியமனங்களுக்கு இனிமேல் புதிய முறைமை அறிமுகம்!

### பிரதமர் ஹரிணி அறிவிப்பு



கொழும்பு, மார்ச் 01

இலங்கையில் நிலவும் பாடசாலை அதிபர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பவும், அதிபர் சேவையை வலுப்ப டுத்தவும் முறையான ஒரு நியமன முறைமை அறிமுகப் படுத்தப்படும் எனப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமர சூரிய தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சில் அதிபர்கள் சேவைச் சங்கத்தின் உறுப்பினர்களுடன் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின்போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களை அடிப்படையாகக் கொண்டு, முறையான ஒரு பொறிமுறையின் ஊடாக அதிபர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

புதிய கல்விச் சீர்திருத்தங்களை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு, கல்வித் துறைசார் நிபுணர்களுக்குத் திருப்திகரமான மற்றும் ஆதரவான பணிச்சூழலை உருவாக்குவது அவசியம் என பிரதமர் வலியுறுத்தினார். (அ)

# நிலக்கரி ஊழல் அநுர அரசாங்கத்தின் உண்மை முகத்தை காண்பித்துள்ளது!

## மனோ கணேசன் சுட்டிக்காட்டு



கொழும்பு, பெப். 28

அரசாங்கம் அரங்கேற்றிக் கொண்டிருக்கும் இந்த நாடக அரசியல் விரைவில் முடிவுக்கு வரும். நிலக்கரி ஊழல் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் உண்மையான முகத்தைக் காண்பித்துள்ளது. அநுரகுமார திஸாநாயக்கவின் ஆட்சியின் முகத்தில் இந்த நிலக்கரி மோசடி கரியைப் பூசியிருக்கிறது என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற கலந்துரையாடலொன்றின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

அரசாங்கம் அரங்கேற்றிக் கொண்டிருக்கும் இந்த நாடக அரசியல் விரைவில் முடிவுக்கு வரும். தேசிய மக்கள் சக்தி முன்னர் கூறிய பொய்களை முன்னிலைப்படுத்தியே ஆட்சியை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறது. தேர்தலில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையின்றி பொய்களைக் கூறினர். தற்போது அவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி செய்து கொண்டிருக்கின்றனர்.

நிலக்கரி ஊழல் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் உண்மையான முகத்தைக் காண்பித்துள்ளது. தரம் குறைவான நிலக்கரி கொள்வனவினால் இனிவரும் நாட்களில் மின்சார உற்பத்தி குறைவடையும்.

இந்த மோசடியால் அரசாங்கத்துக்கு 700 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஆனால் அமைச்சர்கள் இல்லை என மறுக்கின்றனர்.

அநுரவின் ஆட்சியின் முகத்தில் இந்த நிலக்கரி மோசடி கரியைப் பூசியிருக்கிறது - என்றார். (அ)

# உள்ளூராட்சி சபைகளுக்கு சுய வருமானம் அவசியம்!

## பிரதியமைச்சர் ருவன் செனரத்

கொழும்பு, மார்ச் 01

உள்ளூராட்சி நிறுவனங்கள் மத்திய அரசின் நிதியை மட்டும் நம்பியிருக்காமல், சுயமாக வருமானம் ஈட்டும் வகையில் மூலதன அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கவேண்டும் என பொது நிர்வாக, மாகாண மற்றும் உள்ளூராட்சி பிரதியமைச்சர் ருவன் செனரத் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி நிறுவனங்கள் சுயமாக வருமானம் ஈட்டும் திட்டங்களுக்காக 2026 ஆம் ஆண்டுக்கான மூலதன நிதியாக 2,500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, உள்ளூராட்சி மன்றங்களின் செயல்திறன் அடிப்படையிலேயே இனி நிதி ஒதுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, உயர் மட்ட செயல்திறன் கொண்ட உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு 100 மில்லியன் ரூபாயும், நடுத்தர மட்ட செயல்திறன் கொண்ட நிறுவனங்களுக்கு 25 மில்லியன் ரூபாயும் செயல்திறன் குறைந்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு 20 மில்லியன் ரூபாயும் ஒதுக்கப்படவுள்ளது என்றும் பிரதியமைச்சர் அறிவுறுத்தினார். (அ)

# கிராம உத்தியோகத்தர்களின் போராட்டம் கைவிடப்பட்டது

கொழும்பு, மார்ச் 01

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு முன்பாக 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நியமனம் பெற்ற கிராம உத்தியோகத்தர்களால் மார்ச் 3 ஆம் திகதி நடத்தப்படவிருந்த அமைதிப் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

கிராம உத்தியோகத்தர்களுக்கும், அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்னையை உரிய அமைச்சருடன் கலந்துரையாடி, அடுத்த ஒரு வாரத்திற்குள் எழுத்துபூர்வமான தீர்வை வழங்குவதாக அமைச்சின் செயலாளர் உறுதியளித்துள்ளார்.

அமைச்சின் இந்த இணக்கப்பாடு காரணமாக மார்ச் 3 ஆம் திகதி நடத்தவிருந்த போராட்டத்தை தற்காலிகமாக கைவிடுவதாக 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நியமனம் பெற்ற கிராம உத்தியோகத்தர்கள் அமைப்பின் ஊடகச் செயலாளர் குமுது வடுமுல்ல தெரிவித்துள்ளார். (அ)

# உயர்தர பாடத்தில் இணையும் "சட்டம்"!

கொழும்பு, மார்ச் 01

இலங்கையின் பாடசாலைக் கல்விப் பாடத்திட்டத்தில் "சட்டம்" என்ற பாடத்தை அறிமுகப்படுத்துவது குறித்த ஆலோசனைகளை வழங்குமாறு இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்திற்கு கல்வி அமைச்சு அழைப்பு விடுத்துள்ளது.

பாடசாலை மாணவர்களிடையே சட்ட அறிவு மற்றும் அதன் முக்கியத்துவத்தை வளர்க்கும் நோக்கில், ஆரம்பக் கல்வியில் இதனை ஒரு கட்டாயப் பாடமாகவும், உயர்தரத்தில் ஒரு விருப்பப் பாடமாகவும் அறிமுகப்படுத்த வேண்டும் என இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் கடந்த 2025 ஆம் ஆண்டு முன்மொழிந்திருந்தது. பாடத்திட்ட மீளாய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் போது, இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் பல்கலைக் கழகங்களின் சட்ட பீடங்களின் பிரதிநிதிகள் ஆலோசனைகளுக் காக அழைக்கப்படுவார்கள் என கல்வி அமைச்சு உறுதி அளித்துள்ளது.

தற்போதைய 2026 ஆம் ஆண்டுக்கான சாதாரண தர பாடத்திட்டங்களில் இந்த மாற்றம் உள்வாங்கப்படவில்லை. இருப்பினும், உயர்தர புதிய பாடத்திட்ட தொகுதிகள் தயாரிக்கப்படும்போது இந்த யோசனை பரிசீலிக்கப்படும் என இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் சத்துர கலேன தெரிவித்துள்ளார். (அ)

# புதிய சுற்றுச்சூழல் சட்டம் தொடர்பில் கிளிநொச்சியில் நேற்று விழிப்புணர்வு

கிளிநொச்சி, மார்ச் 01

புதிய சுற்றுச்சூழல் சட்டம் தொடர்பில் தெளிவூட்டும் கலந்துரையாடல், சுற்றாடல் அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

அமைச்சின் மேலதிக செயலாளர் ரவீந்திர காரியவசம் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நளாயினி இன்பராஜ், மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள், சுற்றுச்சூழல் அதிகார சபை உத்தியோகத்தர்கள், வன வளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் என்பவற்றின் உத்தியோகத்தர்கள், சுற்றுச்சூழல் தொடர்பான அதிகாரிகள் பங்கேற்றனர். (அ)

# ஜனவரியில் சரிந்த ஆடை ஏற்றுமதி!

கொழும்பு, மார்ச் 01

இலங்கையின் ஆடை ஏற்றுமதி 2025 ஜனவரியில் 437.07 மில்லியனாக இருந்த நிலையில், 2026 ஜனவரியில் 2.66 வீதம் சரிந்து 425.44 மில்லியன் டொலர்களாக குறைந்துள்ளதாக தொழில்துறை அமைப்பு தெரிவித்துள்ளது.

இது நாட்டின் முக்கிய ஏற்றுமதி சந்தைகளில் தொடர்ச்சியான அழுத்தத்தை பிரதிபலிக்கிறது. அதன்படி, ஜனவரி செயல்திறன் சீரற்ற உலகளாவிய தேவையை எடுத்துக்காட்டுவதுடன், பன்முகத்தன்மை மற்றும் போட்டித்தன்மையை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலுப்படுத்துகிறது என்று கூட்டு ஆடைச் சங்க மன்றம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவிற்கான ஆடை ஏற்றுமதி 2.73 வீதம் குறைந்து 165.11 மில்லியன் டொலர்களாக உள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதி (இங்கிலாந்து தவிர்த்து) 1.93 வீதம் குறைந்து 126.99 மில்லியன் டொலர்களாக உள்ளது. இங்கிலாந்துக்கான ஏற்றுமதி நிலையாக இருந்தது, 0.23 வீதம் அதிகரித்து 61.71 மில்லியன் டொலர்களாக இருந்தது.

அதே நேரத்தில் ஏனைய சந்தைகளுக்கான ஏற்றுமதி 6.07 வீதம் குறைந்து 71.63 மில்லியன் டொலர்களாக இருந்தது என்று கூட்டு ஆடைச் சங்க மன்றம் தெரிவித்துள்ளது.

ஜனவரி மாத முடிவுகள் சீரற்ற உலகளாவிய தேவையைக் குறிக்கின்றன என்றும், நாட்டின் ஆடைத்துறையின் பன்முகத்தன்மை மற்றும் போட்டித்தன்மையை மேம்படுத்தவேண்டியதன் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன என்றும் கூட்டு ஆடைச் சங்க மன்றம் கூறியது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org